விலை சதம் 5

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(நிளப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone 3411
நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 18உ செவ்வாய்க்கிழமை — Colombo, November, 4, 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 20 | இதழ் 154

சீமெந்துத் தொழில் நிலையத்தில் வேலை கொடுப்போமென்று நிலம் பெற்றனரா?

அறுபது வயது சென்றால் அரசினர் தொழில் கிடையாது

அரசாங்க வாக்குறுதி காற்றில் விடப்பட்டதா?

காங்கேசன்துறை கிராமவாசிகள் கஷ்டம்

[நமது சொந்த நிருபர்]

கொழும்பு, நவ. 4

காங்கேசன்துறையிலுள்ள சிமெந்துத் தொழிற்சாலைக்கு நிலங் கொடுத்த அநேக கிராம வாசிகள் மிகுந்த துன்பத்துக்காளாகியிருக்கிறார்கள்.

இந்நிலங்கள் பொதுவாக சிறு சிறு துண்டு நிலங்களாகப் பல ஏழைக் கிராம வாசிகளால் வைத்திருக்கப்பட்டிருந்தனவாகும். அரசாங்கம் சிமெந்துத் தொழிற்சாலையை நிறுவுவதற்காக இவர்களிடமிருந்து, இந் நிலங்களை அத்தியாவசியத்தின் பேரில் பெற்றுகொண்டது.

இக் கிராம வாசிகள், தங்கள் நிலங்களுக்குக் கிரையமும், சிமெந்துத் தொழிற்சாலையில் நிரந்தர வேலையும் அரசாங்கத்தால் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கையின் பேரிலேயே தங்கள் காணிகளைக் கொடுத்தார்கள் என்று அறியப்படுகிறது.

இந்த நம்பிக்கை ஒப்பந்தத்தின் பேரில் சிலருக்கு ஆங்கு வேலைகள் கொடுக்கப்பட்டன. ஆயின் அவர்கள் அறுபது வயதை அடைந்ததும் அரசினரின் கீழ் தொழில் செய்ய முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர்.

கைத் தொழில் வர்த்தக இலாகா தலைவருக்கு அக் கிராம வாசிகள் தங்களை வேலையில் வைத்திருக்க வேண்டுமென்று மனுப்பண்ணினர். இம் மனுவை தலைவர் பிரதம காரியதரிசிக்கு அனுப்பி வைத்தாராம். பிரதம காரியதரிசி ஒருவன் அறுபது வயது சென்றால் பின் கடமையாற்ற முடியாதென்று தீர்ப்பளித்துள்ளாராம். ஆகவே அவர்கள் தங்கள் வேலைகளினின்று நிற்பாட்டப்பட்டனர்.

வேறும் பலர், அரசாங்கம் வேலை கொடுக்கும் என்று உத்தரவாதம் அளித்துள்ளதன் பேரில் காணிகளைக் கொடுத்தவர்கள், எப்பொழுது வேலை வரும், அரசாங்கமும் தன் வாக்குறுதியைக் கனம் பண்ணும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள் என அறியப்படுகிறது.

இவ்வாறு காத்திருக்கும் கிராம வாசிகள் அரசாங்கத்திற்கு மனுப்பண்ணினால், வேலைகள் காலியாக இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று ஒரு வழமையான பதிலைப் பெறுகின்றனர்.

சர்வதேச வர்த்தக மகாநாடு

பட்டேவியா, நவ. 3

இந்தோனேஷியாவின் உதவிப் பிரதமராகிய டாக்டர் ஏ. கே. கனி. இம்மாதம் 10-ம்தேதி குடியரசுப் பிரதிநிதிகளுடன் பட்டேவியாவிலிருந்து, உத்தியோகம், வர்த்தகம், சம்பந்தமாக நவம்பர்மாதம் 21-ம் தேதி ஹவனாவில் நடைபெறவிருக்கும் நேசதேசங்களின் மகாநாட்டுக்குச் செல்லுவார்.

(ராய்ட்டர்)

ஆஸ்திரேலியாவிலிருந்து போலிஸிற்கு நாய்கள் வாங்க உத்தேசம்

கொழும்பு, நவ. 3

இலங்கையின் போலிஸ் தலைவர் திரு. றிச்சார்ட் அலுவிஹார ஆஸ்திரேலியாவிலிருந்து போலிஸாருக்கு உதவியாகப் போலிஸ் நாய்களை வரவழைப்பதற்கு உத்தேசித்திருக்கிறாராம்.

ஆஸ்திரேலியாவில் இந்நாய்கள் யுத்த காலத்தில் நன்கு பயிற்றப்பட்டு கொலை காரரைப் பிடித்துக் கொள்ளுவதற்கும் குற்றங்களைத் தடுப்பதற்கும் உபயோகிக்கப்பட்டனவாம்.

இலங்கையும் மற்றும் நாடுகளைப்போல் குற்றத் தடுப்புக்காக நவீனமான சாதனங்களை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றே போலிஸ் தலைவர் அபிப்பிராயப்படுகின்றாராம்.

லண்டன் போலீஸார் மோப்பம் கொண்டு கொலைகாரரைப் பிடிக்கும் நாய்களை அதிகம் விரும்புகின்றனராம்.

மாகோ போலிஸார் புறுக்கள் மூலம் ஊர் கிராமங்களிலுள்ள விதானையார்களுக்குச் செய்திகள் அனுப்புவதில் வெற்றி பெற்றிருக்கின்றனர்என்று திரு. அலுவிஹார கூறியுள்ளாராம்.

அவிசாவளையிலிருந்துகொழும்புக்கு புறுக்கள் மூலம் செய்திகள் அனுப்பிப் பரீட்சித்த பொழுது அப்புறுக்கள் ஒரு மணித்தியாலத்திற்கு 40 மைல் வரையில் பறந்துள்ளனவாம்.

இலங்கை அரசாங்கம் அனுப்பும் கடிதங்கள்

'முக்கிய கடிதங்களின் நகல்களை நான் பார்க்கவேண்டும்' என்கிறார் கவர்னர்

"அப்படியே ஆகுக" என்கிறார் சேனநாயக்கா

கொழும்பு, நவ. 3

புதிய அரசியல் திட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் எங்ஙனம் தொடர்புகள் வைத்திருக்கப்படும் என்னும் விஷயமாக கவர்னர் இலங்கைப் பிரதமருக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதம் பிரதமரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.

அதில் புதிய அரசியல் திட்டப் பிரகாரம் கவர்னரும் குடியேற்ற நாட்டு மந்திரியுமே இத்தொடர்புகளை வைத்திருப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது இவைபற்றிய இலங்கையின் பொறுப்புகள் பிரதமர் கையில் இருக்கும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் இருந்து இலங்கை அரசாங்கத்துக்கு வரும் கடிதங்கள் முதலில் கவர்னரிடம் வரும். அவரால் உடனே அது பிரதமர் ஆபீசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதேபோலவே இலங்கை அரசாங்கம் அனுப்பும் கடிதங்களும் கவர்னர் ஆபீசுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதே முறையே தந்திகள் சம்பந்தமாகவும் அனுஷ்டிக்கப்படும்.

இலங்கையின் வெளி நாட்டுப் பிரதிநிதிகள், இந்திய டொமினியன் இலங்கையில் உள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு எழுதும் கடிதங்களும் கவர்னர் மூலமே போகவேண்டும். அத்துடன் மேற்படி கடிதங்கள் அரசாங்கக் கொள்கை சம்பந்தமானதாய் இருந்தால் அக் கடிதங்களின் நகல்கள் கவர்னர் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இத் திட்டத்தை திரு. சேனநாயக்கா ஏற்றுக்கொண்டதோடு இதனை உடனே அமுல் நடத்த மந்திரிமார் தன்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கடிதங்களும் எழுதியுள்ளார்.

ஆனால் திரு. சேனநாயக்கா இத் திட்டத்தை "சுயாட்சி பெறும் வரை உள்ள இடைக் காலத்துக்கு மட்டுமே தாங்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாக" தமது பதிலில் குறிப்பிட்டுள்ளார். 'அதன் பின் இது விஷயம் புதிதாக சர்ச்சை செய்யப்பட வேண்டும்" என்றும் அவர் கூறுகிறார்.

காஷ்மீரில் பொதுஜன வாக்கெடுக்க இந்திய டொமீனியன் நாட்டம்

"அழகிய ஸ்ரீநகர் அழிவின் எல்லையை எட்டிப்பார்க்கின்றது"

பாகிஸ்தான் ஆதரவில் காஷ்மீர் தாக்கப்பட்டதாம்

பிரதமர் நேரு ரேடியோ பேச்சு

புதுடில்லி, நவ. 3

மகாத்மா கர்ந்தி பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் காஷ்மீர் மீது படையெடுப்புக்கு பட்டாணியருக்கு பாக்கிஸ்தான் சர்க்கார் ஆதரவளிப்பதாக கூறியதுடன் காஷ்மீரில் கொள்ளையடிக்கும் ஒரு கோஷடிக்கு சுபாஷ் சந்திரபோஸின் ஆஜாத் ஹிந்த்படை மாஜி அதிகாரிகள் இருவர் தலைமை வகித்து நடத்துவதாக தாம் அறிவதாகவும் இக் கொள்ளைக் கோஷடிக்கு இவர்கள் தலைமை வகிப்பது ஏனென்பது தமக்கு விளங்கவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார். மேலும் இரு நாடுகளிடையேயும் உள்ள சந்தேகமும், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதும் உண்மையில் கைவிடப்படுமாயின் பெரிய அளவில் இரு டொமினியன்களுக்கிடையேயும் நடக்கும் ஜனமாற்றம் சிறுத்தப்படலாமென்பதில் சந்தேகமில்லையென்றும் அவர் கூறினார்.

"காஷ்மீரில் சமாதானம் நிலைநாட்டப்பட்டதும், இந்திய டொமினியன், ஆங்கு சர்வதேச ஆதரவின்கீழ் ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்தும்" என்று இந்தியாவின் பிரதம மந்திரியாகிய பண்டித ஜவஹர்லால் நேரு நேற்று இரவு அகில இந்திய ரேடியோவில் பேசியபோது குறிப்பிட்டார்.

அபிரிடிஸ், மகுத்ஸ், வஜிரிஸ ஆகிய மலைஜாதியினர் எல்லையுள் இந்திய அரசாங்கம் மூற்றுகை யிடாது என்று முன் வாக்களித்துள்ளது. அவ்வாக்குறுதியை "நாம்காப்பாற்றுவோம்" என்றார் பண்டித நேரு.

தொடர்ந்து பண்டித நேரு கூறியதாவது:-

"காஷ்மீர் எதிரிகளின்தாக்குதல் களினின்றும் விடுபட்டதும் எங்கள் படைகளுக்கு ஆங்கு வேலைகிடையாது. காஷ்மீரின் தலைவிதியை நிர்ணயித்துக்கொள்வதற்கு காஷ்மீர்மக்களிடமே விட்டுவிடுவோம்"

"நான் உடனடியாக ஒன்று கூறவிரும்புகிறேன். காஷ்மீர் சம்பந்தமாக இந்தநடவடிக்கையை தக்க ஆலோசனையின்பின்பே நாம் எடுக்க நேர்ந்தது நாம் செய்ததுசரியென்றே பூரணமாகஎண்ணுகிறோம்.

எமது அயல் அரசாங்கங்கள் எம்மீது ஆபாசமான பாஷைகளை உபயோகித்தன. எந்த அரசாங்கமாவது இவ்விதம் வசை உபயோகிக்கமாட்டாது. பொறுப்பு வாய்ந்தவர்கள் இந்திய யூனியன் சில சமஸ்தானங்களைச் சேர்த்துக்கொள்வதற்காக மிரக பலத்தை உபயோகித்துள்ளதாக கூறியிருக்கின்றனர். அவ்வித வசைகளை நான் உபயோகிக்கவிரும்பவில்லை; உபயோகிக்கவும் மாட்டேன்.

தொடர்ந்து பண்டித நேரு கூறியதாவது:-

ஏமாற்றமும், மிருகபலமும் காஷ்மீரில் உபயோகிக்கப்பட்டுள்ளதென்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் அதற்குப் பாத்திரவாளிகளயாவர் என்பதே கேள்வி? காஷ்மீரில் அதிகப்படியான பிரதேசங்கள் வெளியேயுள்ள ஆயுதந்தாங்கிய தாக்குதல் காரர்களால் தாக்கப்பட்டுள்ளன. பட்டணங்களும், கிராமங்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன அதுவுமல்லாமல் அங்குள்ள ஜனங்களையும் ஓட்டம்பிடிக்கச் செய்துள்ளனர்.

அழகு நிரம்பிய ஸ்ரீநகர் அழிவின் எல்லையை எட்டிப்பார்க்கத் தொடங்கிவிட்டது.

ஜம்முவிலிருந்து தாக்குதல்கள் நடைபெற்றதாகவும் இஸ்லாம் மக்கள் கொல்லப்பட்டதாகவும், கலைக்கடிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட் டிருக்கின்றது.

சென்ற காலத்தில் நாம் தீயனவற்றை எவர் செய்தபோதிலும் தீயனவென்றே சொல்லிவந்துள்ளோம். ஹிந்துக்களாயிருப்பினுமென், முஸ்லிம்களாயிருப்பினுமென், சீக்கியர்களாயிருப்பினுமென் எல்லாம் ஒன்றுதான். ஆகவே ஜம்முமாகாணத்தில், முஸ்லிம்களோ, சீக்கியர்களோ, அல்லது ஹிந்துக்களோ அல்லாவிட்டால் ஆங்குள்ள அரசாங்க உத்தியோகஸதர்கள் எவர்களோ தப்பாக நடந்திருந்தால் நாங்கள் அவற்றைக் கண்டித்து அச்செயல்களுக்காகத் துக்கப்படுகிறோம்.

"ஆயின் என் முன்னதாக பாக்கிஸதானிலிருந்து வந்து றெயிடர்கள் தாக்கியதான ஜம்மு மாகாணத்திலுள்ள 95 கிராமங்களின் பெயர்கள் இருக்கின்றன.

"ஒரு முக்கியமான நகரம் பாழ்படுத்தப்பட்டுள்ளது. வேறும் பட்டினங்கள் முற்றுகையிடப்பட்டிருக்கின்றன. பூஞ்ச் பிரதேசம் றெயிடர்கள் கையிலேயே இருக்கின்றன.

"இது எதைக் காட்டுகின்றது? அட்டூழிய காஷ்மீர் பக்கத்திலிருந்து தொடங்கப்பட்டதா? அல்லது மேற்குப் பஞ்சாப்பிலிருந்து தொடங்கப்பட்டதா? அல்லது சகல ஆயுதத்துடனும் மேற்குப் பஞ்சாப்பிலிருந்து காஷ்மீர் சமஸதானத்திற்குள் அக்கிரமம் செலுத்தப்பட்டதைக் காட்டவில்லையா?

"காஷ்மீருக்குள் புகுந்த எதிரிகள் பலம பொருந்திய ஆயுதங்களுடனும், தக்க தலைவர்களுடனுமே சென்றிருக்கிறார்கள் இவை யாவும் பாக்கிஸதான் பிரதேசத்திலிருந்தே வந்துள்ளன.

மேலும் பண்டித நேரு சொல்லியதாவது:-"மேற்குப் பஞ்சாப்பிலுள்ள எல்லைப்புற மாகாணத்தால் இம் மனிதர் எவ்விதம் வந்தார்கள், ஏன் வந்தார்கள் என்பதை பாக்கிஸதான் அரசாங்கத்திடம் கேட்பதற்கு எமக்கு உரிமையுண்டு. அவர்கள் எவ்விதம் ஆயுதம் தாங்கியிருந்தார்கள் என்பதையும் கேட்க உரிமையுண்டு. இது சர்வ தேச சட்டத்திற்கு விரோதமான செயல் இல்லையா? தங்கள் அயல் தேசத்தின் மீது சிநேகப்பான்மையற்ற செயலல்லவா? தங்கள் பிரதேசங்களுக்கு ஊடாக துருப்புகள் சென்று இன்னுமொரு நாட்டை ஆக்கிரமிக்கும் செயலை தடுப்பதற்கு பாக்கிஸதானிடம் பலமில்லையா? அல்லது அப்படி ஆக்கிரமிக்க வேண்டுமென்று பாக்கிஸதான் விரும்புகிறதா? இதினின்றும் வேறு விதமான மாற்றங்கள் கிடையாது"

கியூபா 30,000 டன் வெள்ளைச் சீனி

இலங்கைக்கு அனுப்ப தயாராம்

கொழும்பு, நவ. 3

30,000 டன் வெள்ளைச் சீனியை இங்குள்ள வியாபாரியொருவருக்கு கியூபாவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாகத் தெரிகிறது.

இதையிட்டு உணவு மந்திரி ஆலோசனை செய்வார் என்று உணவுக் கமிஷனர் திரு. கே. ஆம்வாப்பிள்ளை கூறியதாக அறியப்படுகிறது. பிரிட்டனிலிருந்து பெறும் சீனியில் பார்க்க இது ஒரு டன்னுக்கு ரூபா 60 குறைவாகவே இருக்கின்றது என்றும் அவ்வியாபாரி கூறியுள்ளாராம்.

கியூபாவிலிருந்து சீனி பெறுவதாக விருந்தால் இலங்கை அரசாங்கம் தான் பெற்றுக் கொள்ள முடியும். காரணம் கியூபா சர்வதேச அவசரகால உணவுக் கவுன்ஸிலுக்கு புறம்பேயுள்ள நாடாகும்.

அவிசாவளை நகர சபைத் தேர்தல்

இருவர் போட்டியின்றி தெரிவு

அவிசாவளை, நவ. 3

அவிசாவளை நகரசபைத் தேர்தல் நியமனப் பத்திரங்கள் இன்று நகரசபைக் கட்டிடத்தில் தாக்கல் செய்யப்பட்டன. முதலாம் வட்டார அபேட்சகர் ஏ. பி. எம். சாலியும்; மூன்றாம்வட்டார அபேட்சகர் ஜக்கொலீற் சொனிவரத்னவும் போட்டியின்றித் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

இதர மூன்று வட்டாரங்களிலும் போட்டியிடும் அபேட்சகர் முதலிய விபரங்கள் பின்வருமாறு.

2-ம் வட்டாரம்: எஸ். பி. பி. பெர்ணண்டோ, கே. டி. எம். பெரேரா, பி. வன்குலன் பேர்க்.

4-ம் வட்டாரம்: எஸ். மனமேந்திரா, ஸி. ஒ. ஜோன், டி. ஸி. விஜயசிங்க.

5-ம் வட்டாரம்: டபிள்யூ. ரொமியல் அப்புஹாமி, கே. டொன் சார்ல்ஸ அல்விஸ.

எகிப்தில் காலரா நிலைமை

கெய்ரோ, நவ. 2

எகிப்திய காலரா நோயில் மரித்தவர் தொகை இன்று 358 ஆகக் குறைந்தது 625 பேருக்குப் புதிதாக நோய் கண்டுள்ளது.

(ராய்ட்டர்)

நாவலப்பிட்டி அர்பன் சபை தேர்தல்

மாஜி அரசாங்க சபை அங்கத்தவர் மனைவியும் ஒரு அபேட்சகர்

நாவலப்பிட்டி, நவ. 3

நாவலப்பிட்டி அர்பன் சபையின் எட்டு தொகுதிகளிலும் அபேட்சகர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டனர். எட்டு வார்டுகளிலும் உள்ள அங்கத்தினர்களுக்கும் போட்டியிருக்கிறது. மாஜி அரசாங்க சபை அங்கத்தவரான திரு. ஜே. ஜி. ராஜகுலேந்திரன் தமது மனைவியின் பெயரை ஒரு வார்டுக்கு சமர்ப்பித்துள்ளார்.

தொகுதி 1. திரு. டி. ஏ. ஷகாப்தீன், திரு. வி. சுப்புசாமி தொகுதி 2. திரு. டி. எச். பியசேனா, ஸ்ரீமதி ஜே. ஜி. ராஜகுலேந்திரன். தொகுதி 3. திரு. ஆர். ஈ. ஜெயதிலகா, திரு. ஓ. எல். அப்துல் லதீப். தொகுதி 4. பி. எச். ஆர். சுமனதாஸா, திரு. ஸி. என். ஷாகீத். தொகுதி 5 திரு. ஏ. எம். ஸி. மரைக்கார், திரு. எஸ். ஏ. ரஹீம். தொகுதி 6 திரு. வி. ஏ. டேவட் பெரேரா, திரு. எஸ். எச். எம். நைனாமரைக்கார். தொகுதி 7. திரு டபிள்யூ. எச். எவ். அடபத்து, திரு. ஏ. ஆர். அப்துல் கரீம், திரு. ஏ. பி. டீன். தொகுதி 8. திரு. டபிள்யூ. ஏ. பியதாஸா, திரு. ஈ. எச். டயஸ.

ஐக்கிய முன்னணி ஏற்படுத்த கமியூனிஸட் கட்சி முயற்சி

கொழும்பு, நவ. 3

இன்றுள்ள சர்க்காருக்கு மாற்றாக வேறு ஒரு சர்க்காரை அமைத்து சோஷலிஸதிட்டப்படி வேலைசெய்ய பொது மக்கள் ஆதரவைத் திரட்டும் முகமாக கமியூனிஸ்ட் கட்சி பல பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகின்றது. இந்த லட்சியத்தை அடைவதற்கு ஏனைய இடதுசாரிக் கட்சிகளையும் கொண்ட ஐக்கியமுன்னணியை ஏற்படுத்த முயற்சிப்பதாக கமியூனிஸட் கட்சி காரியதரிசியும் கொழும்பு மத்திய தொகுதி பாராளுமன்ற அங்கத்தினருமான திரு பீட்டர் கெனமன் கூறுகின்றார்.

முனிசிபல் சபை ரூ. 6899 போனஸ கொடுக்கலாம்

கொழும்பு, நவ. 3

டிராம்வே போக்குவரத்து சர்விசை மூனிசிபல் சபை வாங்கிய காலத்தில் அதிக வேலைகளைச் செய்த அதிகாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் ஒரு மாதச் சம்பளம் அளிக்கப்படவேண்டுமென டிராம்வே கமிட்டி சிபார்சு செய்திருந்தது. இதனை நிதிக்கமிட்டி அங்கீகரித்துள்ளது. இதன்படி முனிசிபல் கமிஷனர் திரு எஸ். பி. விக்கிரமசிங்காவுக்கு ரூ. 2000, திரு டி. வி. பெரேரா ரூ. 1150, திரு ஸ்ரீவாட் ஓர் ரூ. 1500, திரு ஆர். கனகராயர் ரூ. 750, திரு எம். எல். விக்கிரம சிங்கா ரூ. 750 பெறுவார்கள். மொத்தமாக இதில் ரூ 6899 கொடுக்கப்படும் இவ்விஷயம் புதன்கிழமை முனிசிபல் சபையில் தீர்க்கப்படும்.

அபேட்சகர் ஏஜண்டை கடத்தியதாக வழக்கு

கேகாலை, நவ. 3

மாவனெல்லை (பாராளுமன்ற)தேர்தல் பொழுது வாக்களிக்கும் தினத்தன்று ஒரு ஏஜண்ட் திரு. ஸி. ஆர். பெலிகமமானா என்பவரைக் கடத்திச் சென்றுவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஆறு பேர்கள் தலா ரூ. 150 பிணையில் போகுமாறு விடப்பட்டனர். இவ்வழக்கு 27-ம் தேதி விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ச, நட்டாந் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஷூ ஐப்பசி மீ 18உ
செவ்வாய்க்கிழமை

அலன் ஸிமித்தின் பொறுப்பா?

இலங்கை அரசாங்கத்தின் வருடாந்தக் கணக்கைப் பரிசோதிப்பதற்காக அலன் ஸிமித் என்ற அதிகாரி ஒருவர் இருக்கிறார் என்பது வாசகர்கள் அறிவார்கள். 1946-47-ம் வருடக் கணக்கை அவர் வெளியிடவில்லை என்று புகார் கிளம்ப, அது விஷயமாய் விசாரணை செய்ததில் அவரிடம் பரிசோதனைக்குக் கணக்குகள் அனுப்பப்படவில்லை என்று வெளியாகிறது. இது சம்பந்தமாய் நமது "சுதந்திரன்" நிருபர் பேட்டி கண்ட விஷயம் ஏற்கெனவே வெளியிட்டிருக்கிறோம்.

இலங்கையின் அரசாங்கவரவு செலவு, ஜனங்கள் கொடுக்கும் வரிப் பணத்தைக் கொண்டும், வாங்கப்படும் கடன் தொகைகளைக் கொண்டும் நடைபெறுகின்றன. இது பொது மக்களுடைய பணம். இவ்வாறு சேர்க்கப்படும் பணத்தை பொதுஜன நன்மையை எண்ணிச் செலவு செய்து நாட்டின் நிர்வாகத்தைச் செவ்வனே நடத்தும் நோக்கமாய் வரி கொடுப்போர் பிரதிநிதிகளைப் பாராளுமன்ற சபைக்கு அனுப்ப அவர்கள் மந்திரிகளை நியமித்து, அவர்கள் மூலம் இப்பணங்கள் செலவு செய்யப்படுகின்றன. இவ்வாறு செலவு செய்யப்படும் பணங்கள், ஜனப்பிரதிநிதிகள் சொல்லிய பிரகாரம் செய்யப்படுகின்றனவா, அதில் மாறுட்டங்கள் ஏதாவது உண்டா என்பதைக் கவனிக்க, ஒரு கணக்குப் பரிசோதகரையும் நியமனம் செய்திருக்கிறார்கள். இந்தக் கணக்குப் பரிசோதகர் ஒரு மந்திரியின் கீழும் வேலை செய்பவர் அல்லர், அவர் கவர்னரால் நியமிக்கப்படுபவர். அவர் பரிசோதித்த கணக்குகளை பொது மக்களின் பிரதிநிதிகளான பாராளுமன்ற சபைக்குக் கொடுக்க வேண்டியவர். சொல்லப் போனால் வரி கொடுக்கும் பொது மக்களுக்கு அவர்களது பணம் எப்படிச் செலவு செய்யப்பட்டிருக்கின்றதென்பதை அறிவிப்பார் அவ்விதமான அறிக்கை 1946-47-ம் வருடத்திற்கு இன்னும் வெளிவரவில்லை, என்ன காரணம் என்பதை பொது மக்கள் அறிய விரும்புவார்கள்.

கணக்குக் கொடுத்த பிறகு தானே பணம் சரிவரச் செலவாகியிருக்கிறதா என்பது தெரியும். இச்சந்தர்ப்பத்தில் நமக்கோர் கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஓர் பருத்தி வியாபாரி 1000ம் பொதி பருத்தியை 1000 தாவள மாடுகளின்மேல் ஏற்றி நாகபட்டினம் துறைமுகத்திற்கு ஏற்றுமதிக்காக அனுப்பினான். அவ்வேலையைச் செய்யத் தனது இனத்தவன் ஒருவனையே கணக்குக அனுப்பினான். பருத்தி போன நேரம் கப்பல் காற்று வசதியில்லாததால் கிடைக்கவில்லை. நாகபட்டினத்தில் சங்கிலுன் காற்று சரிவரும் வரையில், நாகபட்டினம் கடற்கரைப் பட்டினம். பல கூட்டாளிகள சேர்ந்தார்கள். தாசிகள் சேர்ந்தார்கள். பருத்தியை விற்று விற்றுச் செலவு செய்தான். முதலாளி கணக்குக் கேட்டால், காற்று வாடை வரட்டும ஏற்றிவிட்டு வந்து கணக்குத் தருகின்றேன் என்றான். பருத்தியெல்லாம் முடிந்தது. மாடுகள் பாக்கி. தினப்பத்து மாடாகவிற்று மற்றமாடுகளுக்குத் தீனி போட்டுத் தானும் செலவு செய்தான். மாடுகளும் மறைந்தன. பருத்தி கட்டி வந்த கோணிப்பைகளைப் பார்த்தான். எல்லாவற்றையும் கறையான் தின்றிருந்தது. கணக்கப்பிள்ளைக்குக் கணக்கு சுலபமாயிற்று. "பருத்தியை நான் தின்றேன். மாட்டை மாடு தின்றது. கோணியைக் கறையான் தின்றது." என்று மூன்று வரியில் கணக்கை எழுதிப்போட்டு விட்டான். முதலாளி கேள்வி கேட்டார். "நீ பருத்தியைத் தின்ன முடியுமா?" என்றார் என்னுடையவும், "என் இனத்தாருடையவும் செலவிற்கு விற்றுத்தின்றேன் என்றான். "மாட்டை மாடு எப்படித்தின்னும்?" என்று மற்றக் கேள்வி கேட்டார். தினம் பத்து மாட்டை விற்று மற்ற மாடுகளுக்கும், ஆட்களுக்கும் செலவு செய்தேன். பாக்கியுள்ள சாக்குகளை கறையான்கள் என்னைக் கேளாமல் தின்றுவிட்டன" என்று சொல்லிவிட்டான்.

நமது பொது மக்களுடைய பணத்தை நமது மந்திரிமார்கள் செலவு செய்திருப்பது மேலே கூறியவற்றிற்கு பல சந்தர்ப்பங்களிலும் ஒப்பிடக் கூடியதாக விருக்கலாம். இந்தக் கணக்கை யாவது எழுதிப் பார்க்க வேண்டாமா என்பது தான் எமது கேள்வி. எல்லா வரவு செலவுகளுக்கும் கணக்கு எழுதிக் காட்ட வேண்டியது பொக்கிஷ மந்திரியார். பொது மக்கள் கொடுத்த 1000 பொதி பருத்திக் கணக்கும் நமது பொக்கிஷ மந்திரி கையில்தான் இருக்கிறது. கப்பல்வந்து சரக்கேற்றிய பிறகல்லவா முதலாளிக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்? இந்நிலையில் நமது இலங்கை அரசாங்கம் நடைபெறுகிறது.

கணக்கை ஏன் காலா காலத்தில் சமர்ப்பிக்கவில்லையென்று பொக்கிஷ மந்திரியைக் கேட்கும் அதிகாரம் யாருக்குண்டு? கணக்குப் பரிசோதகர் அலன் ஸிமித்திற்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர் ஒரு காரியம் செய்திருக்கலாம். இதுவரையில் பருத்திக் கணக்குத்தான் வந்திருக்கிறது. மாட்டுக் கணக்கும் சாக்குக் கணக்கும் வந்தபிறகு அறிவிக்கிறேன் என்று ஒரு யாதாள்தை வெளியிட்டிருந்தால் நன்றாக யிருந்திருக்கும்

இப்பொழுது கூடப்போகும் பாராளுமன்றக் கூட்டத்தில் கணக்குகளைப் பரிசோதனைக்கு அனுப்ப ஏன் தாமதம் என்பதைக் கேட்டு, அதன் பொறுப்பு யாருடையது என அறிந்து; காலதாமத்திற்கு காரணம் இன்னு ஏற்படாமல் பொதுமக்கள் பிரதிநிதிகள் ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இலங்கை சமூக சேவைச் சங்க அங்குரார்ப்பணம்

கொழும்பு, நவ. 3

வெள்ளவத்தை கலங்கடுவா பிளேஸில் நேற்று காலை 10 மணிக்கு திரு எம். கந்தையா தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இலங்கை சமூகசேவைச்சங்கம் அமைக்கப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி திரு வி. சிவபால சிங்கம் பேசினார். இதன் பின்னர் "இலங்கை சமூக சேவைச் சங்கம்" என்னும் பெயருடன் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

நிர்வாக அங்கத்தினர்களாக திரு எம். கந்தையா (தலைவர்) திரு எம். நாகலிங்கம் (உபதலைவர்) திரு வி. எஸ். கந்தையா (நிர்வாக சபைத் தலைவர்) திரு வி. சிவபால சிங்கம் [ஸ்தாபனக் காரியதரிசி] திரு எள். திருநாவுக்கரசு [தனாதிகாரி] திரு பி சி. சுப்பிரமணியம் [உப தனாதிகாரி] திரு எஸ். சொர்ணவடிவேல் (பரிசோதகர்) மற்றும் ஆறு பேர்களும் தெரியப்பட்டனர்.

சங்க அங்குரார்ப்பண விஷயமாக தலைவர் பேசுகையில் இளைஞர்கள் அரசியல்கலப்பற்ற சமூக ஸ்தாபனங்களில் பங்கு பற்றி நாட்டின் பொருளாதார சமுதாய அபிவிருத்திக்குத் தொண்டாற்றவேண்டுமென்று குறிப்பிட்டார்.

விவசாய அதிகாரி இலங்கை திரும்பினார்

கொழும்பு, நவ. 3

பிரிட்டனில் இருந்து சனிக்கிழமை வந்த 'எம்பயர் பிரெண்ட்' என்ற கப்பலில் டாக்டர் ஜே டபிள்யூ. எஸ். பீரிஸ இலங்கை வந்து சேர்ந்துள்ளார். இவர் விவசாயப் பகுதியில் விசேஷ பயிற்சிகள் பெறுவதற்கு பிரிட்டன் சென்றிருந்தார். இவர் பயிற்சி முடிந்ததும் இலங்கை திரும்பியுள்ளார்.

முதுராஜவெலாவில் நெற் சாகுபடி

விவசாய இலாகாவின் திட்டம்

கொழும்பு, நவ. 4

மேற்குக் கடற்கரையோரமாக உள்ள முதுரர்ஜவெலா பகுதியை நெற் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள விவசாய இலாகா திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது. இப்பகுதியில் பரீட்சார்தகமாக உற்பத்திசெய்த நெற் சாகுபடி திருப்தியைக் கொடுத்துள்ளதாகாரணமாகவே அவர்கள் பெரிய அளவில் இங்கு நெற் சாகுபடிக்கு திட்டம் வகுத்துள்ளனர். இப்பகுதியில் கடல் நீர் பெருகுவதுவழக்கம். அதோடு இப்பகுதி ஒருவகை சதுப்பு நிலமாகவும் இருக்கிறது இந்த இடத்தில் 'பொக்கலி' என்று அழைக்கப்படும் ஒரு இன நெல்லையே சாகுபடி செய்ய ஆலோசித்தனர்.

முதுராஜவெலாவில் சுமார் 150 ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்கு எடுப்பதென்றும் கிடைக்கும் விதை நெல்லுக்கு ஏற்பவே இடமும் எடுக்கப்படுமென்றும் இப்பொழுது சுமார் 500 புசல் விதை நெல்லு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

பசுவதையை தடுக்கும்படி மந்திரிக்கு வேண்டுகோள்

அர்பன் சபைக் கூட்டத்தில் தீர்மானம்

மாத்தறை, நவ. 3

மாத்தறை அர்பன் சபையின் கூட்டம் திரு வில்பிரட் குணசேகரா தலைமையில் நடைபெற்றது. திரு. ஏ. எம். ஸாரூக், இறைச்சிக்காக பசுக்களைவதை செய்வதைத் தடுக்க வேண்டுமென ஸ்தலஸ்தாபன சுகாதார மந்திரியை கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதே தீர்மானத்தை பிரதிகளை எல்லா ஸ்தலஸ்தாபனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பவேண்டுமென்றும் அங்கங்கு அவர்களும் இதே தீர்மானங்களை நிறைவேற்றலாமென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கால் நடைகளை போஜா தினங்களில் கொலைசெய்வதை தடுக்க வேண்டுமென திரு. எச். ஏ. ஜோன் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். விவாதத்தின்பின் வெஸாக் தினத்திலும் போசன் தினத்திலும் கால்நடைகள் கொலைசெய்யப்படுவதை தடைசெய்வதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்ற அங்கத்தவருக்கு வரவேற்பு

அம்பலாங்கொடை-பலப்பிட்டி தொகுதியில் அளிக்கப்பட்டது

அம்பலாங்கொடை, நவ. 3

அம்பலாங்கொடை - பலப்பிட்டியா தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. பி. எச். வில்லியம், டி. ஸில்வாவுக்கு இப்பகுதி மக்கள் ஒரு வரவேற்பளித்தனர். பட்டபொலா பௌத்த பாடசாலையில் ஸ்ரீமதி செலினா பெரேரா தலைமையில் ஒரு வரவேற்புப் பொதுக் கூட்டமும நடைபெற்றது. பலர் இக்கூட்டத்தில் பேசினார்கள்.

யுத்தத்தில் அழிந்து போன வீடுகள்

நிர்மாணிப்பதற்கு 17 கோடி ஸ்டெர்லிங

லண்டன், நவ. 2

நவம்பர் 10-ம் தேதியன்று பத்து கோடி ஸடெர்லிங் யுத்தத்தின் காரணமாக அழிந்து போன கட்டிடங்களை திருப்பி அமைப்பதற்காக அரசாங்க பொக்கிஷத்திலிருந்து எடுத்து அனுப்பிவைக்கப்படும். மொத்தம் 1 லட்சத்து 40 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க இது உபயோகப்படும். மொத்தம் 2 லட்சத்து 16 ஆயிரம் கட்டிடங்கள் அழிந்திருப்பதாகவும் எல்லாவற்றிற்கும் 17 கோடி ஸடெர்லிங் தேவைப்படுமென்றும் தெரிகிறது. [ராய்ட்டர்]

பிரிட்டனில் முனிஸிபல் தேர்தல்:

தோல்வி பிரமாதமல்ல:

-தொழிற் கட்சிக் காரியதரிசி

"அரசாங்கத்துக்கு பொதுஜன ஆதரவில்லை" -- திரு. சர்ச்சில் கூற்று

கன்ஸர்வேடிவ்கள் பொதுத் தேர்தல் கோருகின்றனர்

பிரிட்டிஷ் முனிஸிபல் தேர்தலின் எதிரொலி

லண்டன், நவ. 2

முனிஸிபல் தேர்தலில் தொழிற்கட்சி தோல்வி அடைந்தது சம்பந்தமாக திரு. வின்ஸ்டன் சர்ச்சில் "பொது மக்களை ஆட்சி செய்யும் அதிகாரத்தை தொழிற்கட்சி இழந்து விட்டது" எனக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

"1945 தேர்தலில் நாடு படுபள்ளத்தாக்கில் வீழ்ந்தது. அதனால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அழிவுப பாதையில் நம்மை தவறான சக்திகள் இழுத்துச் சென்றன. இந்த வீழ்ச்சிக்குப் பின்னர் நமது நாடு கண்டிருக்கும் சிறந்த சம்பவம் முனிசிபல் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியினர் சுயேச்சைவாதிகளின் அபாரமான பெரு வெற்றியே.

"பொதுத் தேர்தலில் தாம் பெற்ற பொது மக்களின் ஆட்சி அதிகாரத்தை சோஷியலிஸ்டு அரசாங்கம் இப்போது இழந்து விட்டது. இனிமேல் பொதுமக்களின் ஆதரவின்றியும் அவர்கள் விருப்பத்திற்கு மாறாகவுமே அவர்கள் ஆட்சி செய்வார்கள்.

தொழிற்கட்சிக் காரியதரிசி தேர்தலில் தமது கட்சி அழிக்கப்பட்டு விட்டது என்று கூறப்படுவதை மறுத்தார். "ஸ்தல ஸதாபன நிர்வாகத்தில் தொழிற்கட்சி வெற்றிக்குமேல் வெற்றி பெற்று வந்தது. அவ்வெற்றி ஓட்டம் சற்று தடைப்பட்டது; அவ்வளவுதான்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் ஹுல்டன் பிரபு கட்சிச் சார்பில் புதிய பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கோரியுள்ளார். ஆனால் அரசாங்கம் இக்கோரிக்கைக்கு இடமளிக்காது என்றே நம்பப்படுகிறது

ஹுல்டன் பிரபு பின்வருமாறு குறப்பிட்டார்:-

"அரசாங்கம் இப்போதுள்ள காமன்ஸ் சபை நாட்டு அரசியல் கொள்கைகளின் பிரதிநிதி அல்ல என்பதைத் தெரிந்து கொண்டு புதிய தேர்தலை நடத்த வேண்டும். இந்தத் தேர்தலில் கட்சிச் செல்வாக்குகளில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணம் பொது மக்கள் தொழிற்கட்சி தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவோ இன்றைய கஷ்ட நிலைமையில் தமக்கு வழிகாட்டவோ தகுதியற்றது என்பதைக் கண்டு விட்டமையே

தேர்தல் முடிவுகள் ஜனங்களுக்கு இப்போதைய அரசாங்கத்தில் நம்பிக்கை இல்லையென்பதையும் காட்டுகிறது".

நேற்றைய முனிசிபல் தேர்தல் முடிவுகளின்படி கன்சர்வேடிவ் கட்சி முதன்மையான ஸ்தானத்தையும், தொழிற்கட்சி பல ஸ்தானங்களை இழந்து இரண்டாவது ஸதானத்தையும் பெற்றன. கமியூனிஸடுகள் ஒன்பது ஸ்தானங்களை இழந்துவிட்டனர். சுயேச்சை வாதிகள் 36 தானங்களைப் பெற்றனர். இவர்கள் கன்சர்வேடிவ் கட்சியுடனேயே ஒத்துழைப்பார்கள். (ராய்ட்டர்)

ரயில் திருட்டுக்கு 6 மாதச் சிறை

அனுராதபுரம், நவ 3

அனுராத புரத்திலிருந்து கொழும்புக்கு வந்துகொண்டிருந்த ரயிலில் அனுராதபுர ஸ்டேஷனில் வைத்து ஒருபெட்டியை திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட ரயில்வே சிப் பந்தியான கே. பி. அப்பு ஹாமி என்பவருக்கு அனுராதபுரம் மாஜிஸ்டிரேட் 6 மாத சிறைத் தண்டனை விதித்தார்.

கண்ணாஸ்பத்திரி சந்தி போக்குவரத்து முறைகள்

முனிஸிபல் சபையிடம் ரூ 43,000 மான்யகோரிக்கை

கொழும்பு, நவ. 3

கொழும்பு கண்ணாஸ்பத்திரி சந்தியில் கையாளப்பட்ட நவீன போக்குவரத்து முறைகள் அமைப்புக்கு கொழும்பு முனிஸிபல் சபை ரூ. 43,000 மான்யம் கொடுக்க வேண்டுமென்று போக்குவரத்து கமிட்டியின் சிபார்சுப்படி நிதிக் கமிட்டி கோரியுள்ளது. இவ்வட்டத்தில் இரண்டு சந்திகளில் ஒரு இடத்தில் 5 வீதிகளும் மற்றயிடத்தில் நான்கு வீதிகளும் சந்திக்கின்றன. இப்பொழுது இங்கு தற்காலிக வசதிகளே செய்யப்பட்டுள்ளன.

பிரிட்டனில் வேலை நிறுத்தம்

பர்மிங்ஹாம் பஸ்கள் ஓடவில்லை

பர்மிங்ஹாம், நவ. 2

1200 பஸ், டிராம் தொழிலாளர் இன்றிரவு வேலை நிறுத்தம் செய்தனர். சம்பளத்தை உயர்த்துவது பற்றி இப்போ பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன. ஆனால் முடிவு வெளியாகுமட்டும் தொழிலாளர் ஓவர்டைம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இந்நிலைமையை எதிர்த்துத் தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்தார்கள்.

வேத கால சமஸ்கிருதம் பயின்று பட்டம்பெற்ற சிங்கள மாது

இலங்கை திரும்பியுள்ளார்

கொழும்பு, நவ 3

பிரிட்டனிலிருந்து சனிக்கிழமை இரவு கொழும்பு வந்து சேர்ந்த "எம்பயர் பிரெண்ட்" என்னும் கப்பலில் ஸ்ரீமதி சந்திர கொடகும்புரா இலங்கை வந்து சேர்ந்தார். இவர் பிரிட்டனுக்கு 1944-ம் ஆண்டில் சென்று அங்கு மூன்று வருடம் எட்டு மாத காலம் கல்வி கற்று பட்டம் பெற்று திரும்பியுள்ளார். இவர் வேதகால சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக எடுத்து பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார். இவர் தமது பட்டத்தைப் பெற்ற பின்னரும் வேத சமஸ்கிருதத்தையும் பாளியையும் தொடர்ந்து ஆராய்ச்சி செய்துள்ளார்

கஞ்சா-அபின் கண்டு பிடிக்கப்பட்டது

இரு எதிரிகளுக்கும் தலா ரூ. 7500 பிணை

கண்டி, நவ. 3

கண்டியிலுள்ள கொழும்பு வீதியிலுள்ள ஒரு வீட்டில் ரூ. 15,000 மதிப்புள்ள கஞ்சாவும் அபினும் போலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இது சம்பந்தமாக டி. பி. பொடி மகாத்மயா, டபிள்யூ. கே. ஏ. பெனடிக்ட் ஆகிய இருவர் மீதும் குற்றஞ்சாட்டி கண்டி மாஜிஸடிரேட் திரு டி. எல். ஸி ராபர்ட்ஸ முன் போலிஸார் அவர்களை ஆஜர் செய்தனர். அபின் மூன்று ராத்தலும், கஞ்சா ஒன்றேமுக்கால் ராத்தலும் இருந்தன. எதிரிகள் தலா ரூ 7500 பிணையில் போகுமாறு விடப்பட்டனர். விசாரணை ஒத்திவைக்கப்புட்டது.

மௌண்ட் பேட்டன்-ஜின்னா சம்பாஷணை

காஷ்மீர் நிலைமைபற்றியாம்

லாகூர், நவ. 1

இந்திய கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனும் பாக்கிஸதான் கவர்னர் ஜெனரல் ஜின்னாவும் இன்று பகல் 2-30 மணிக்கு சர்க்கார் மாளிகையில் சந்தித்தனர். அவர்கள் காஷ்மீர் நிலைமைபற்றிப் பேசியதாக நம்பத்தகுந்த செய்தி கிடைக்கிறது. அவர்கள் 3 மணி நேரம் சம்பாஷித்தனர்.

கூட்டுப் பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டம் முடிந்ததும் லார்டு மவுண்ட் பேட்டன் பாக்கிஸதான் பிரதமர் ஜனாப் லியாகத் அலிகானைச் சந்தித்து 40 நிமிஷ நேரம் ரகசியமாகச் சம்பாஷித்தனர். அவர்களிருவரும் காஷ்மீர் நிலைமைபற்றிச் சம்பாஷித்ததாகத் தெரிகிறது.

காஷ்மீரைப் படையெடுத்திருப்பவர்களில் ஆப்பிரிதீஸ், வாஸிரீஸ், மாஷுத முதலிய மலை வாசிகளே முக்கியமானவர்களென்று இங்கு சுகவல் கிடைத்திருக்கிறது இவர்களைப் பற்றியும் இவர்களிடமுள்ள நவீன ஆயுதங்களும், படையெடுப்பாளர்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமேயில்லையென்று பாக்கிஸதான் சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையையும் ஒப்பிடடுப் பார்த்தால் ஆச்சரியமாகத்தானிருக்கிறது,

பாகிஸ்தான் பச்சைப் புளுகு

ஆப்பிரிதிகளைத்தவிரவாஜிரிகளும் மாஷுத்களும் காஷ்மீர் எல்லைக்கு வரவேண்டுமானால் பாக்கிஸதான் பிரதேசம் வழியாக வாஜிரிஸதானிலிருந்து 250 மைல் பிரயாணம் செய்திருக்கவேண்டும். படையெடுப்பாளரிடமுள்ள ஸடென்கன்களும் மலைப்பிராந்தியங்களில் உற்பத்தி செய்யப்பட்டதல்ல. அவர்களுக்கு அவைகள் பாக்கிஸ்தானிலிருந்துதான் கிடைத்திருக்க வேண்டும். காஷ்மீரில் யுத்த தளவாடங்களைக் கொண்டு செல்ல அவர்களுக்கு லாரிகள் கிடைத்திருப்பதோடல்லாமல் அவ்வப்பொழுது முன்னணிக்குச் சப்ளைகளைக் கொண்டு செல்லவும் மோட்டார் லாரி வசதிகள் கிடைத்திருக்கின்றன

எதிரிகளுக்கு லொறி ஏது?

அவர்களுக்கு லொறிகளும் பெட்ரோலும் எங்கிருந்து கிடைக்கின்றன? மேலும் அவர்களுக்கு பயிற்சி பெற்ற ராணுவத்தினரே பின்னாலிருந்து நடத்துகின்றனர்

வீர ரோந்து நடவடிக்கை

சர்க்கார் அறிக்கையொன்று கூறுவதாவது.- இந்திய ராணுவம் ரோந்து நடவடிக்கையை அதிகப்படுத்தியிருக்கிறது. வியாழனன்று காஷ்மீருக்கு வெகு தூரத்தில் எதிரிகள் நம் துருப்புகளைத் தாக்கினர். ஆனால் அவர்கள் முறியடிக்கப்படடு விரட்டப்பட்டனர். எதிரிகளுக்கு பலத்த உயிர்ச்சேதம் இந்திய விமானங்கள் எதிரிகளைப் பலமாகத் தாக்கின.

இந்திய சர்க்காருக்கு உதவி

காஷ்மீர் யுத்தத்தில் வெற்றி பெற இந்திய சர்க்காருக்கு எல்லாவித உதவியையும் அளிப்பதென்று பாட்டியாலா மகாராஜா தலைமையில் நடந்த பாந்திக் தர்பார் காரியக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

பாந்திக் தர்பார் தீர்மானம்

காஷ்மீர் நிலைமையை உத்தேசித்து எலிஸபெத் விவாகத்திற்காக இங்கிலாந்து செல்ல இருந்ததை பாட்டியாலா மகாராஜா ரத்து செய்து விட்டார்

பாசிஸ்ட் கூட்டத்தில் ஐவர் கைது

"பாசிஸம் ஒழிக" என்ற கோஷம்

லண்டன், நவ. 2

இங்கு நடைபெற்ற இரண்டு பாசிஸ்டு மாஜி ராணுவ வீரர் சங்கக் கூட்டங்களின்போது ஐவர் கைது செய்யப்பட்டார்கள்.

முதலாவது கூட்டத்தில் மூவரும் இரண்டாவது கூட்டத்தில் ஒருவரும் ஆட்சேபகரமாகப் பேசியதாக குற்றம் சாட்டிக் கைது செய்யப்பட்டனர் ஐந்தாவது கைது இன்று அதிகாலையில் செய்யப்பட்டது.

இரண்டாவது கூட்டத்தில் பாசிஸட் முக்கியஸ்தர் மேடையில் ஏறியதும் 'பாசிஸம் வீழ்ந்தொழிக!' என்று கூட்டத்தில் இருந்தவர்கள் பலமாகக் கோஷம் செய்ததாகத் தெரிகிறது. (ராய்ட்டர்)

பாடசாலைகளுக்கு தளபாட மானயம்

கல்விச் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானங்கள்

கொழும்பு, நவ 3

இலங்கை கல்விச் சபையின் 52-வது வருடாந்தக் கூட்டம் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்ட் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எஸ். எஸ். ஸி., எச். எஸ். ஸி பரீட்சைகளுக்கு அபேட்சகர்களாகவிருக்கும் மாணவர்களுக்கு கல்வி டைரக்டர் காட்டும் பாரபட்சத்தைக் கண்டித்தும் இலவசக் கல்வித் திட்டத்தில் சேரும் பாடசாலைகளுக்குத் தகுந்த தளபாட மான்யத்தைச் சர்க்கார் கொடுக்க வேண்டும்; அல்லது அதற்காக குறிப்பிட்ட அளவு பணத்தைமாணவர்களிடமிருந்து பெறுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும், தாய்ப் பாஷையை போதனா பாஷையாக எடுத்துக்கொள்ளும் நேரத்தில் ஆங்கிலத்தின் தராதரத்தைக் குறைக்க முற்படாதென்றும் தீர்மானங்களில் கூறப்பட்டிருந்தன.

இதன் பின் சங்க நிர்வாகிகள் தெரியப்பட்டனர். நிரந்தரக் கமிட்டிக்கு 16 அங்கத்தவர்கள் தெரியப்பட்டார்கள்

மன்னரின் இளையகுமாரி

ருமேனிய அரசரை மணப்பாரா?

லண்டன், நவ. 2

இளவரசி எலிஸபெத் திருமணத்திற்கு ருமேனிய மன்னர் விஜயம் செய்வார் என்ற செய்தி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, இளவரசி மார்கரட் ரோஸ் (இளவரசி எலிஸபெத்தின் தங்கை) ருமேனிய மன்னரைத் திருமணம் செய்யக்கூடும் என்று ஓர் செய்தியை ஒரு பிரெஞ்சுப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. ஆனால் இது லண்டனில் பொறுப்புள்ள வட்டாரங்களில் ஊர்ஜிதமாகவில்லை.

பாரிஸ் பத்திரிகை "லூபே" இங்கிலாந்தின் இளவரசி மார்கரட் ரோஸ் ருமேனிய மகுடத்தை அணிவாரா? என்ற கேள்வி கேட்கப்படுகிறது என்று எழுதியுள்ளது. (ராய்ட்டர்)

பிரிட்டன்-பர்மா நேச உறவு

பலப்படுத்த பர்மிய ஹை கமிஷனர் ஆவல்

லண்டன், நவ. 2

நேற்று லண்டன் வந்து சேர்ந்துள்ள பிரிட்டனிலுள்ள பர்மிய ஹை கமிஷனர் ஸர். மொங்ஜையீ, தம்முடைய ஆவல் பிரிட்டனுக்கும் பர்மாவுக்கும் இப்பொழுது இருந்து வரும் நேச உறவைப் பலப்படுத்துவதே என்று கூறினார்.

ஸர். மொங்ஜையீ, "பர்மியர்கள், பிரிட்டிஷார் தாமாகவே பர்மாவிலுள்ள ஆதிக்கத்தை விட்டு விடுவதுமல்லாமல், சுதந்திரம்பெற்ற குழந்தைப் பருவத்தில்உத செய்வதற் ம்முன்வந்துள்ளதைப்பாராட்டுகிறார்கள்" என்று ராய்ட்டருக்குக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுனகாட் திவான், பொலீஸ் கமிஷனர் ராஜிநாமா

இளவரசருக்கு நவாப் பட்டம்

ராஜ்கோட், நவ. 1— ஜுனகாட் திவான் சர். ஷா நவாஸ் பூட்டோவும், பொலீஸ் கமிஷனர் கான் பகதூர் நாக்வியும் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்துவிட்டதாகத் தெரிகிறது.

சமஸ்தானத்தின் பல முக்கிய அதிகாரிகள் காராச்சிக்கு ஓடுவதாகவும் தெரிகிறது.

திவான் சர். பூட்டோ கராச்சிக்குப் புறப்பட்டுச் சென்றதாக ஊர்ஜிதமாகாத தகவல் ஒன்று கூறுகிறது.

ஜுனகாட் நவாப் கராச்சிக்குப் போய்விட்டதால் இளவரசர் ஹிமாயத்கானை நவாபாக முஸ்லிம் வகுப்புவாத ஸ்தாபனம் (நமியத்) பிரகடனம் செய்திருப்பதாகவும் அத்தகவல் கூறுகிறது.

போட்டி சர்க்காருக்கு மேலும் வெற்றிகள்

போட்டி சர்க்காரின் படை இன்னும் மூன்று கிராமங்களைக் கைப்பற்றிவிட்டது. சில கிராமங்களின் ஹவில்தார்களும் கைது செய்யப்பட்டனர் கதகாரா கிராமமும் போட்டி சர்க்கார் வசமாகியது.

ஜுனகாட் போட்டி சர்க்கார் தலைவர் ஸ்ரீ காமன் காந்தியை நேற்று பேட்டி கண்ட முஸ்லிம் ஜமியத் தூதுகோஷ்டி சில நிபந்தனைகளின் பேரில் ஜுனகாட் இந்திய யூனியனில் சேர தயாராக இருப்பதாக அறிவித்தது

ஜுனகாட் நவாப்பின் சிம்மாசனத்தில் இளவரசர் ஹிம்மத்கானை அமர்த்த ஒப்புக்கொண்டால் இந்திய யூனியன் ஜுனகாட்டைச் சேரும்படி செய்வதாக ஜமியத்தின் சமாதான ஷரத்துக்களை ஸ்ரீ காந்தி முன்பு சமர்ப்பித்த தூது கோஷ்டி கூறியது.

ஜுனகாட் கோட்டையில் இந்திய யூனியன் கொடியை ஏற்றி பாகிஸ்தானுடன் தனக்குள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்வதுடன் சமஸ்தானத்தில் பொறுப்பாட்சியும் ஏற்படுத்திய பின்தான் தாம் சமாதான ஷரத்துக்களைக் கவனிக்கத் தயாராக இருப்பதாக ஸ்ரீ காந்தி அறிவித்ததாகத் தெரிகிறது.

போட்டி சர்க்கார் தலைவரது பகிலை ஜமியத்தின் மகா சபைக் கூட்டத்தின் முன் சமர்ப்பிக்கும் பொருட்டு தூது கோஷ்டி ஜுனகாட் திருமபியது.

'பலவந்த மதமாற்றம் கூடவே கூடாது'

பலாத்காரமாக மதத்தை திணிப்பது ஒழுங்கல்ல

பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா பிரசங்கம்

புதுடில்லி, அக். 31— இன்று பிரார்த்தனை முடிவில் மகாத்மா சொன்னதாவது:— "அகதிகளிடையே பணக்காரர், ஏழை என்ற தாரதம்மியம் இருப்பது வெகு நன்றாகத் தெரிகிறது. நவகாளியிலும் இதைப் பார்த்தேன் டில்லியிலும் இதைக் கண்டேன். கலவரப் பிரதேசங்களிலிருந்து பணக்காரர் எப்படியோ தப்பிவிடுகிறார்கள். ஏழைகளால் இப்படி போக முடியவில்லை. இது தப்பு. பணக்காரர் ஏழைகளை இவ்வாறு கைவிடக் கூடாது. இன்பமோ துன்பமோ இருவரும்தான் சேர்ந்து அனுபவிக்க வேண்டும். துன்பம் எல்லா வேற்றுமைகளையும் போக்குவதாகும். அப்பொழுதுதான் அகதிகள் முகாம் என்பது, சிறந்த கூட்டுறவைக் காணும் இடமாக விளங்கும்

நாற்றுககணக்கான முஸ்லிம்களை ஹிந்து மதத்துக்கும் சீக்கிய மதத்துக்கும் மதமாற்றுவதாக என்னிடம் சில முஸ்லிம்கள் வந்து புகார் கூறினார்கள். இது தவறு. வேண்டாதவர்களிடம் மதத்தைக் கொண்டு போய் புகுத்த முடியாது. மேலும் இந்த மதமாற்றம் செல்லாது. முஸ்லிம்களால் மதம் மாற்றப்பட்டவர்களுக்கும் இது பொருந்தும். மெஜாரிட்டி மக்கள் மைனாரிட்டிகளின் நலன்களைக் காப்பதுதான் ஒழுங்கு."

சிங்களப் பத்திரிகைகள் கூறுவதென்ன?

சிங்களவர் ஜன்ம விரோதிகள் தமிழர்களே!

யாழ்ப்பாணத் தமிழருடன் ஒத்துழைப்பது புத்திசாலித்தனமான செயலல்ல

சிங்கக் கொடியன்றி எந்தக் கொடியையும் சிங்கள ரத்தம் ஏற்கமாட்டாது

மந்திரிகள் பத்திரிகைகளின் அந்தமான் புத்தி

சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி திரு பண்டாரநாயக்காவை தலைவராகக் கொண்ட சிங்கள மகா சபையின் பத்திரிகையான "சிங்கள பலய" 1-11-47 ல் எழுதியவற்றின் சுருக்கமான தமிழாக்கம்:

வட இலங்கையில் வகுப்புவாதத்தைக் கிளப்பி எல்லா தொகுதிகளிலும் தமிழர் காங்கிரஸிற்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்த திரு. பொன்னம்பலத்தின் எதிர் காலத்திய கோட்பாடென்ன? அங்கே போட்டியிட்ட யூ. என். பி அபேட்சகர்களை தோற்கடித்து, வடக்கேயும் கிழக்கேயும் எட்டு ஆசனங்களைக் கைப்பற்றியதினால் தமிழர் காங்கிரஸ் நினைப்பதென்ன? இந்தியன் காங்கிரஸினதும் இடதுசாரிகளினதும் ஓரளவு ஒத்துழைப்பைப் பெற்றிருக்கும் தமிழர் காங்கிரஸின் அபிலாஷை யென்ன? தற்போதைய அரசாங்கத்தின் பிரதம மந்திரி பதவியையும் பார்லிமெண்ட் தலைவர் பதவியையும் மற்றும் உயர் பதவிகளையும் தாமே கைப்பற்றி-அரசாங்கத்தையே கைப்பற்றி-சிங்களவர்களையும் யூ. என் பி. யையும் தொலைத்துவிட்டு மறுபடியும் ஒரு எல்லாள யுகத்தை யுண்டாக்குவதற்கே இந்தப்பாடெல்லாம்.

* * *

குருடனான வீணை வாசிப்பவனுக்கு சிங்கள அரசனால் வட இலங்கை தீபகற்பம் பரிசாக வழங்கப்பட்டது. இதனால் அதற்கு "யாழ்ப்பாணம்" என்ற பெயர் வழக்கத்திலிருந்து வருகிறது. இந்தப் பரிசில் பெருமைகொண்ட அவன் இந்தியாவிலிருந்த தன் சகாக்களை வரவழைத்து அங்கே குடியேற்றினான். இவர்கள்காலப்போக்கில் ஜனத்தொகையில் அதிகரித்துக் கொண்டே வந்தார்கள். இவர்களால்-தமிழர்களால்- அன்றும் இன்றும் சிங்களவர்களுக்கு எவ்வித ஒத்துழைப்பும் நன்மையும் உண்டாகவில்லை. ஒரு சமயம் ஆறுவது பராக்கிரம பாகு அரசர் காலத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் சிங்களவர்களுக்கு எதிராகச்செய்தகலகத்தை சப்புமல் குமாரன் என்பவரால் அடக்கி ஒடுக்கப்பட்டது. எனினும் எத்தனையோ தடவைகளில சிங்களவர்களை ஒழித்துக்கட்ட கலகமும் சதியும் போராட்டங்களும் செய்தார்கள். சில சமயங்களில் மன்னர்வரைக்கும்கூட அவர்களின் ஆதிக்கம் ஏற்பட்டிருந்தது. எங்கள் சிங்கள ஆதிக்கம் நிலவியகாலத்தில் இந்த யாழ்ப்பாணத் தமிழர்களை அடக்கி ஒடுக்குவது அவ்வளவு பிரமாதமான காரியமல்ல வெனினும் இப்பொழுது சிறிது கஷடமாய்க்தான் இருக்கிறதென்று சொல்லாமல் இருக்கமுடியவில்லை. சாதியாபிமானமற்ற சிங்கள அரசியல் கட்சியின் ஆதரவைப் பெற்ற தமிழர்-காங்கிரஸ் அன்றும் இன்றும் அரசியல் ஆதிக்கததை தம் கைக்குள் கொண்டுவர மரணப் போராட்டம் செய்கிறார்கள்.

பழைய மூடத்தனங்களைப் பற்றி நண்குணர்ந்திருந்த இன்றைய சிங்களவர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலையடையும் இச்சமயத்தில்,ஒரு சமயம் இந்தியர்களுக்கு நாம் அடிமைப்பட நேரிடுமோவென்று எப்படியும் நினைக்க வேண்டாம். 2358 வருடங்களாக தமிழர்களிடமிருந்து லங்கா பூமியை காப்பாற்றி வந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற சிங்களவீரர்களை துச்சமாகக் கருதுகிற -இழிவு படுத்துகிற- நிந்தனை செய்கிற-எங்களுடன் ஜன்ம வைராக்கியம் கொண்டிருக்கிற-இந்த தமிழ்க் காங்கிரஸ என்ன தான் செய்துவிடும்? தமிழர்கள் என்ன வெட்டி விழுத்திவிடுவார்கள்? ஆனபடியால் எக்காரணம் கொண்டும் யாழ்ப்பாணத் தமிழர்களோடு ஒத்துழைப்பது, அவர்களை அண்டவிடுவது புத்திசாலித்தனமான செய்கையல்ல இரங்கிக் கொடுப்பவர்களுக்கு குரைக்கிற நாய்கள்தான் இவர்கள். எனவே திரி சிங்களவர்களை ஒழித்துக் கட்ட விரும்புந் துஷ்ட தமிழர்களைப்பற்றி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்

* * *

போக்குவரத்து மந்திரி திரு கொத்தலாவலயை ஆசிரியராகக் கொண்ட யூ. என். பி. பத்திரிகை 'சியரட்ட' 31-10 47-ல் தேசியக் கொடியைப்பற்றி எழுதியதன் சுருக்கம்:

இடதுசாரிகளினதும் தோட்டப் பகுதி இந்தியர்களுடையவும் ஆதரவைப் பெற்றிருக்கிற பொன்னம்பலம் மச்சான் சிங்கக் கொடி தேசியக் கொடியாக ஏற்படுவதை பலமாக எதிர்த்து வளர்ச்சி செய்கிறார். வேறு கொடியையுண்டாக்கயோசனை கூறுகிறார். பொன்னம்பலத்தின் விருப்பப்படி தேசியக் கொடி ஏற்படாவிட்டால் சமசமாஜ மச்சான்களின் கொடியான அரிவாளும் சுத்தியலும் பொறிக்கப்பட்ட கொடியை யாவது யாழ்ப்பாணத்தில் உயர்த்தி விடுவதாக பயமுறுத்தியிருப்பதாகத் தெரிகிறது!

உயிரோடு இருந்தால் வருகிற பெப்ரவரி மாதம் 18-ம் தேதி இலங்கையின் தேசிய கொடியை உயர்ததுவதாக பிரதம மந்திரி சபதம் கூறியிருக்கிறார். விவசாய மந்திரியின் சபதமும் அப்படித்தான். இதிலிருந்து யூ என். பியின் தேசியக் கொடி சம்பந்தமான கொள்கையென்னவென்று அறிந்து கொள்ளலாம். இந்த சபதத்தினால், தோட்டப்பகுதி தமிழ் கும்பல்களும் வடக்கே பொன்னம்பலத்தின் முன்னணியும் வெடிகுண்டு பட்டபன்றிகள் கலந்தாடினமாதிரி திகைத்து விட்டார்கள். பின்பு ஆயிரக் கணக்காக செலவழித்து பொய்க் கைச்சாத்திட்டு சிங்கக் கொடியை தேசியக் கொடியாக்குவதை எதிர்த்து அரசாங்க உயர்தர பீடங்களுக்கு தந்திச் செய்தி அனுப்புகிறார். இதிலும் பயன்படாது போயின் இங்கிலாந்து "வைட்ஹால்" வரைக்கும் போவதாக பயமுறுத்துகிறார். இந்தப் பயமுறுத்தல்களினால் தேசத்திலே அமைதியற்ற நிலைமை காணப்படுகிறது.

தேசியக் கொடிப் பிரச்னை விளையாட்டல்ல. இலங்கையை தம்முரிமையாகக் கொண்ட சிங்களவர்களின் வாழ்வுக்கும் மரணத்திற்கும் இடையேயுள்ள போராட்டமாகும். 1815ம் வருடம் மார்ச்சு மாதம் 2-ம் தேதி கண்டி அரசர் மாளிகையின் கொடிக் கம்பத்தில் பறந்துகொண்டிருந்த சிங்கக் கொடியேயன்றி வேறு பொன்னம்பலம் (துர்தாந்தயா) சொல்லுகிற பனைமரத்தின் கீழ் தூங்கி விழும் சிங்கத்தின் ரூபததை பொறிக்கப்பட்ட கொடியையோ அல்லது ரஷியக் கொடியையோ இலங்கையில் தேசியக் கொடியாக உயர்த்துவதற்கு இடம் கிடைக்குமென்று ஒரு பொழுதும் எண்ண வேண்டாம். சிங்கக் கொடியை விட வேறு எந்தக் கொடியையும் உயர்த்துவதற்கு சிங்கள ரத்தம் சிறிதாவது இருக்கிற சிங்களவன் இடங்கொடுக்க மாட்டானென்பதை தமிழர்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். எனினும் தமிழர்களால் எழுப்பபட்டிருக்கும் கிளர்ச்சியையையும் அறைகூவலையும் அலட்சியமாகக் கருதக் கூடாது. எமது தாய்நாட்டின் தேசியக் கொடி, சிங்கக்கொடி தானென்று தோட்டப் பகுதிகளிலிருக்கும் தமிழர்களினதும் வடக்கே இருக்கிற பொன்னம்பலம் கூட்டத்தினரதும் காதுசெவிடுபடும்படி அறைகூவிசவால்விட வேண்டியதுதான் இப்போது உடனடியாகச் செய்ய வேண்டிய முதல் வேலையாகும். இது சம்பந்தமாக "லங்காஜாதிக்க சங்ரட்சண மண்டலம்" நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பிரிட்டிஷ் தங்கம் வெளியேற்றம்

டாலர் வாங்குவதற்காக 5½ கோடி பவுன் தங்கம் விற்பனை

லண்டன், அக். 31— அக்டோபர் மாதத்தில் மொத்தம் மூன்றரை கோடி பவுன் தங்கம் பிரிட்டிஷ் பொக்கிஷத்திலிருந்து விற்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் டாலர் நெருக்கடி ஏற்பட்டது முதல் பிரிட்டன் ஐந்தரை கோடி பவுன் தங்கம் விற்றிருக்கிறது. பிரிட்டனின் தங்க ஸ்டாக்கு 60 கோடி பவுன் டாலர். பிரதேசத்தில் போதிய பணம் கிடைப்பதற்காக மேற் கூறப்பட்ட அளவுக்கு தங்கம் விற்கப்பட்டிருக்கிறது.

சென்ற 18 நாட்களில் ஒரு கோடியே எண்பது லட்சம் பவுன் மதிப்புள்ள தங்கம் லண்டனிலிருந்து ஜெனிவாவுக்கு விமான மூலம் அனுப்பப்பட்டிருக்கிறது எனத் தெரிகிறது.

"தகரக் குவளைகளில் தேநீர் வழங்குவதை நீக்குக"

ஹரிஜன சங்கத்தின் வேண்டுகோள்

இலங்கை இந்திய ஹரிஜன சேவா சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் புதிய சோனகர் தெரு 119-ம் நிர். கட்டிடத்தில் தலைவர் எல். கே. முத்தையாபிள்ளை தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் பலர் சங்க வளர்ச்சியைப்பற்றி பேசியபின் கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

1. பல தேநீர்க் கடைகளில் மனிதரில் ஒரு வகுப்பாருக்கு மட்டும் தகரக் குவளைகளில் தேநீர் வழங்குவதை தடைசெய்வதன் பொருட்டு டாக்டர் கே. நாகரத்தினம் தலைமையில் தூதுக் கோஷ்டியொன்று இச் சங்கத்தால் நகரசபை மேயரைக் கண்டு பேசுவது

2. சுமார் 1700 ஏக்கர் விஸ்தீரணமுள்ள எட்டியாந்தோட்டை, பனாவத்தை எஸ்டேட்டில தறபொழுது இருந்து வரும் ஒரு பள்ளிக்கூடம் போதாதாகையால் இன்னுமோர் பள்ளிக்கூடம் நிறுவுமாறு இச் சங்கம் கல்வி மந்திரியையும், தோட்டச் சூப்ரண்ட் துரையையும், இ. இ. காங்கிரஸையும் கேட்டுக்கொள்கின்றது.

"இந்திய கப்பல்களை பிற நாடுகளுக்கு விற்கக்கூடாது"

இந்திய அரசாங்கத்தின் அவசர சட்டம்

புதுடில்லி, நவ. 1— இந்தியாவில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள கப்பல்களின் எண்ணிக்கை குறையாமல் இருப்பதற்காக கவர்னர் ஜெனரல் ஒரு அவசரச் சட்டத்தை பிரகடனம் செய்திருக்கிறார். இது நேற்று வெளியிடப்பட்டுள்ள இந்திய சர்க்காரின் விசேஷ கெஜட்டில் பிரசுரமாகியிருக்கிறது.

அதன் விவரம் வருமாறு :—

"இந்தியாவில் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கப்பல்கள் வேறு எந்த நாட்டின் ரிஜிஸ்டருக்கும் மாற்றப்படுவதை தடுக்க யுத்த காலத்தில் இந்திய சர்க்கார் அதிகாரத்தை வைத்துக்கொண்டிருந்தனர். ஆனால், இந்திய பாதுகாப்பு விதிகள் காலாவதியானவுடன் இந்த அதிகாரமும் காலாவதியாகிவிட்டது. ஆனாலும், பிரிட்டன் இதர தேசங்களின் சர்க்கார்கள் இந்த அதிகாரத்தை இன்னமும் செலுத்தி வருகின்றன.

"உலகெங்கும் கப்பல்களின் எண்ணிக்கை குறைவாக இருந்து வருவதால், இந்தியாவிலுள்ள கப்பல்களின் எண்ணிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, இந்திய சர்க்காரின் அனுமதியின்றி எந்த கப்பலையும் விற்பனை செய்யக்கூடாது."

மூன்றாவது கால் வருட பகுதி வீட்டு வரி வசூல்

ரூ 75,000 முனிஸிபல் சபை இருப்பு கொடுக்க நேரிடலாம்

கொழும்பு, நவ. 3 கொழும்பு முனிஸிபல் சபை வருடத்தின் மூன்றாவது கால் வருட பகுதி முதல் பின்னர் உள்ள ஆறு மாத காலத்துக்கும் வீட்டு வரியை 30 சத விகிதமாக உயர்த்தியிருந்தது. வருட ஆரம்ப முதல் 20 சத விகித வீட்டு வரியையே முனிஸிபல் சபை பெற்றிருந்தது அதிகப்படியான வரியை 3வது கால் வருட பகுதிக்கு முனிஸிபல் சபை வசூல் செய்கையில் வருட முதலே 30 சத விகிதத்துக்கு வரி வசூல் செய்வதாக கணக்கிட்டு வீட்டுச் சொந்தக்காரர்களிடம் வரிகளை வாங்கியுளளது. முனிஸிபல் சபை இவ்விதம் மேலதிகமாக பிழையாக வாங்கிய வீட்டு வரி சுமார் ரூ. 75,000 வரை இருக்குமென்றும் இவற்றை திரும்ப கொடுப்பதுபற்றி முனிஸிபல் சபை புதன்கிழமை ஆலோசிக்குமென்றும் கூறப்படுகிறது இப்பொழுதுள்ள கடைசிப் பகுதிக்கும் முனிஸிபல்சபை அதே முறைப்படி வரியை வசூல் செய்யுமானால் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு முனிஸிபல் சபை சுமார் ஒன்றரைலட்சம் ரூபாய் திரும்பக் கொடுக்கவேண்டியிருக்குமென்று கூறப்படுகிறது

வீடுகளில் குடியிருப்பவர்கள் வீடுகளின் சொந்தக்காரர்களுக்கு கொடுக்க வேண்டிய வரிகளை அறிவிப்பதுபற்றி முனிஸிபல் சபை நிதிக் கமிட்டி சட்டக் கமிட்டியுடன் ஆலோசித்துள்ளது. வீட்டு வரி பற்றி எழுதிக் கேட்கும் நகர மக்களுக்கு முனிஸிபல் கமிஷனர் அவற்றைப்பற்றி விபரமாக தெரிவிக்க வேண்டுமென்று இரு கமிட்டிகளும் சிபார்சு செய்துள்ளன.

25,000 பேருக்கு மேல் மதம் மாற்றப்பட்டனர்

மேற்குப் பாஞ்சாலத்தில் அட்டூழியங்கள்

புதுடில்லி, அக். 31— மேற்குப் பஞ்சாலத்தில் பல கிராமங்களில் ஏராளமான முஸ்லிமல்லாதார்கள் மதம் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று, அகதிகள் நிவாரண மந்திரி காரியாலய மந்திரிக்கு செய்தி கிடைத்திருக்கிறது. இது வரையில் கிடைத்திருக்கும் தகவல்களிலிருந்து 25,000 பேர் மதம் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என தெரிகிறது. இவர்களல்லாமல் மற்றும் பல கிராமவாசிகள் எல்லோரும் ஒரேயடியாக மதம் மாற்றப் பட்டிருக்கிறார்களாம்

கடத்திச் செல்லப்பட்ட பெண்களை மீட்பதற்கு கிழக்கு மேற்கு பாஞ்சால அதிகாரிகளின் உதவியின் பேரில் உத்தியோகஸ்தர் அல்லாதார் ஸ்தாபனமொன்று சீக்கிரத்தில் அமைக்கப்படும்.

டாக்டர் ஜோஷியைக் கொன்ற முஸ்லீம் கவுன்ஸிலர்

புதுடில்லி, நவ 1— சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற கலவரங்களின் போது, தாக்கப்பட்டு காயமடைந்தவர்களுக்கு வைத்திய உதவியளித்து சேவை செய்துவந்த பிரபல டாக்டரான என் ஸி, ஜோஷியை, கரோல்பாக் பிரதேசத்தில் அவர் வீட்டிற்கருகில், தாக்கி கொலை செய்ததாக கைது செய்யப்பட்ட, டில்லி முனிசிபல் கமிட்டி மெம்பரான டாக்டர் அப்துல் கனி குரோஷி நேற்று செஷன்ஸுக்கு கமிட் செய்யப்பட்டார். டிசம்பர் மாதம் 8ப் தேதியன்று செஷன்ஸ் விசாரணை ஆரம்பமாகும்.

டாக்டர் ஜோஷி கொலை செய்யப்பட்ட பின்னர், பாகிஸ்தானுக்கு செல்வதற்காக டாக்டர் குரோஷி ஸ்ரீ நிஜாமுதீன் ரயில்வே ஸ்டேஷனில் காத்திருக்கையில் போலீசார் அவரை கைது செய்தனர்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

தோட்டப்பள்ளிக்கூட ஆசிரியர்கள்

ஐயா,

அரசாங்க சபையில் பல உத்தியோகஸ்தர்களினதும் சம்ள விஷயமாகப் புதுப்புது விதிதங்கள் வகுத்து, சம்பளததைப் பன் முறைகளில் கூட்டியிருக்கின்றார்கள். ஆனால் 60, 70, 80 மானவர்களுடன் வருடமுழுவதிலும் விடுதலை (ஓய்வு) இன்றித் தனித்துக் கஷ்டப்படும் தோட்டப்பாடசாலை ஆசிரியர்களின் விஷயத்தில் அவர்கள் கவனம் செலுத்தாது இருப்பதன் காரணம் யாதோ? மிகவும் வருந்தக் கூடிய விஷயமாக இருக்கின்றது.

அரசாட்சிப பாடசாலையிலோ, அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலையிலோ தனிமையாக ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் இருப்பின் 15 சராசரி இருக்க வேண்டும் என்றும், 35,40 சராசரி இருப்பின் 2 ஆசிரியர் இருக்கலாம் என்றும் 61 சராசரி இருப்பின் 2 பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடன் ஒரு பயிற்சி பெறாத ஆசிரியர் இருக்கலாம் என்றும் 60 க்குள் 40 க்கு மேல் சாராசரி இருப்பின் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியருடன் 3 ஆசிரியர்களையும் வைத்துப் புதிய சம்பளத்திட்டப்படி அவர்கள் தகைமைகளுக்கேற்ற சம்பளம் கொடுக்கின்றார்கள்.

தோட்டப் பாடசாலையிலோ என்றால் 46 சராசரிக்குக் குறையாமலும் அதற்குமேல் எவ்வளவு மாணவரையும் வைத்துக் கொண்டும் ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியர் அப்பாடசாலைப் பிரமாணப்படி நாள் ஒன்றிற்கு 5 மணித்தியால வேலையை வருடம் முழுவதிலும் ஓய்வு எடுக்காமல் செய்து முடித்ததாலும் அவருக்கு 40-00 (நாற்பது ரூ.) யே 1928-ம் ஆண்டின் பழைய பிரமாணப்படி மாதம் ஒன்றிற்கு கொடுக்கின்றார்கள்.

ஏனைய தொழில்கள் செய்வோருக்குப் புதுத் திட்டங்கள் வகுக்கப்பட்ட போதும் தோட்டப் பாடசாலை ஆசிரியர் விஷயங்களில் ஒருவிதமான நடவடிக்கைகளும் எடாது விட்டிருப்பது மிகமிக வருந்தக் கூடிய விஷயமாகும்.

கண்ணியமும், பிறர் நலமும் விரும்பக்கூடியவர்களுமான அரசாங்க சபை அங்கத்தவர்களும், மந்திரிமார்களும் இவ்விஷயத்தைத் தம் ஆலோசனைக்கெடுத்து எம் போன்ற தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் பிள்ளைகட்கும் உதவி அளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
வதுளை மு. கிருஷ்ணபிள்ளை.
27-10-47 ஆசிரியன்

கற்குடா பிரதிநிதி

ஐயா!

28-10-47ல் வெளிவந்த சுதந்திரனில் 'நல்லையாவின் நன்றி கெட்டதனம்' என்னும் தலையங்கத்தின் கீழ் கற்குடா அங்கத்தினர் திரு. வ. நல்லையாவைப் பற்றிய கடிதத்தை வாசித்தேன்.

ஆம்; அவர் கடந்த அரசாங்க சபையில் இருந்துகொண்டு தம் உற்றார் உறவினருக்கு உத்தியோகங்களைக் கொடுத்து மாடு தானும் நிம்மதியாகப் படுத்துறங்க முடியாத பள்ளிக்கூடங்களைக் கட்டி அவர்களைப் படிப்பிக்கும்படி செய்து, அரசினர் பணத்தில் கொஞ்சத்தைத் தொலைத்தார், அப்படிப்பட்டவர் தேர்தல் நெருங்கியதும் புலியாக இருந்தவர் பசுத் தோலைப் போர்த்துக்கொண்டு கற்குடா பகுதிக்கு ஓடிவந்து ஊரவர்களின் கால்களைக் கும்பிட்டு பல்லைக் காட்டி யூ, என். பி.யைப் பலவாறு கீழான கதைகள் பேசித் தூசித்து வியாகூல முகத்துடன திரிந்தார். இதனைக் கண்டவர்கள் இவரை ஒருவாறு ஆக்கிவிட்டனர். இப்படிப்பட்டவர் யூ. என். பி.யிற் சேர்ந்து பிரதமர் கொடுத்த பதவியைக் கும்பிட்டுப் பெற்றுக் கொண்டாராம். ஆ! இது என்ன மர்மம், நன்றியிருக்கிறது. மக்கள் செய்த நன்றியை மறந்து நாய்க்குத்தானும் நிகரற்றவர் ஆகிவிட்டாரே. ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி என்று கூறியவர் போலானார் நல்லையா, சுயேச்சை எனத் தனித்து நின்று பார்த்தார். அவரினுடைய காரியங்கள் பலிக்க வில்லை போல் தோன்றுகின்றது. அப்படியிருந்தாலும் தமிழ் மக்களின் வாயிலே மண்ணள்ளிப் போட்டுவிட்டார் நல்லையா. அவருக்கு இது ஈனம் என்று தெரியாதோ இது எங்கட்கும்கூட அல்லவோ அவமானம். திரு. கே டபிள்யூ. தேவநாயகம் அவர்களை ஆதரித்திருந்தால் இப்படி எங்கட்கு நேராது.

சகோதரர்களே! இதை நான் உங்கட்கு நினைப்பூட்டுகின்றேன். மறந்துவிடாதீர்கள். நம் பிரதிநிதியின் செயலை எப்படி மறக்க முடியும். ஆனால் காலங் கடந்துவரும் தேர்தல்களில் இவரை தக்கவிதமாக ஆதரித்து தக்க பாடம் படிப்பித்து இப்பகுதிக்கும் எட்டிப் பார்க்கத்தானும் விடமாட்டோம் என்பதை அவருக்கு அறியக் கொடுக்கின்றோம். உண்மைத் தொண்டரானால் அப்பதவியை ராஜினாமாச் செய்யட்டும். நாய்க்கு நிகரற்றவரேயானால் அப்படியே இருக்கட்டும்; என் கடிதத்தையும் அவர் ஏற்கட்டும்.

இங்ஙனம்,
க. ந. த. ராஜன்.
வந்தாறுமூலை,
29-10-47

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ரானி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.
V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் (மரைக்கார் கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சினாப்பள்ளி

கட்டிடத்துக்கு
தேவையான சிமந்தும்
மற்றச்சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 2029
டெலிகிராம்: 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி அறிவித்தல்

எனது இளைய சகோதரன் திரு. கே. சிதம்பரம் பிள்ளைக்கும் பச்சவங்களா தோட்டம் திரு கே. ஆறுமுகம் பிள்ளையின் குமாரத்தி செல்வி பாக்கியவதி தெய்வானை அம்மாளுக்கும் 27-10-47ல் வெகு சிறப்பாக திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் சமூகமளித்தவர்களுக்கும் நன்கொடையும் ஆசிச் செய்தியும் அனுப்பிய நண்பர்களுக்கும் எங்களை மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தங்களன்புள்ள,

கே. வேலுப்பிள்ளை.
டன்சிலேன் தோட்டக்கணக்கு,
பூண்டுலோயா.

யூகோ அரசாங்கத்தின் சீற்றம்

அமெரிக்க ஏழுத்தாளர் நாடு கடத்தப்பட்டார்

பெல்கிரேட், நவ 2

'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையின் நிருபர் திரு. ஆர்தர் பிராண்டவ் அவதூறான துரதப்பானதுமான தகவல்களை எழுதியமைக்காக யூகோஸ்லாவிய அரசாங்கத்தால் நாளையே நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுவிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளார்.

அவரது மனைவியார் மேரி பிராண்டவ் யுனைட்டெட் பிரஸ் நிருபராக யூகோவில் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (ராய்ட்டர்)

இலங்கை-இந்திய பிரச்னை

விரைவில் தீர்க்கப்படுமென திரு. ஆனேக்கு பிரதமர் தகவல்

நாஸிக், நவ 3

இலங்கையில் இந்திய சர்க்கார் பிரதிநிதியாக இருந்த திரு. எம். எஸ் ஆனேக்கு இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயக்கா அனுப்பிய செய்தியில், இந்தியா-இலங்கை பிரச்னை இரு நாடுகளிடையேயும் விரைவில் திருப்திகரமாக தீர்க்கப்படுமென்று நம்புவதாக தெரிவித்துள்ளார். புதிய அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற நடவடிக்கை ஆரம்பித்த போது [அக். 23-ம் தேதி] திரு ஆனே அனுப்பிய பாராட்டுச் செய்தியில் இந்தியா-இலங்கைப் பிரச்னையை விரைவில் சுமுகமாகத் தீர்த்து இரு நாடுகளிடையேயும் நெருங்கிய தொடர்பை இலங்கை டொமினியன் அந்தஸ்து பெறுவதுடன் செய்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்திருந்ததற்கு பிரதமர் மேற்கூறிய பதில் அனுப்பியிருந்தார். (அ. பிரஸ்)

வெங்காய நெருக்கடி

இந்திய சர்க்காருக்கு இலங்கை சர்க்கார் விண்ணப்பம்

கொழும்பு, நவ. 3

இந்தியாவிலிருந்து வெங்காயம் ஏற்றுமதி செய்வதை இந்திய சர்க்கார் தடைவிதித்துள்ளது. இத்தடையை நீக்கும்படி இலங்கை சர்க்கார் இந்திய சர்க்காருக்கு விண்ணப்பித்துள்ளது. இலங்கைக்கு மாதவீதம் 2500 டன் வெங்காயம் தேவை என்றும் இந்திய சர்க்கார் தடைவிதித்ததால் உள்நாட்டு சப்ளை வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டதென்றும் உணவு இலாகா அதிகாரி ஒருவர் கூறுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சங்கக் கடைகள் மொத்த விற்பனை நிலையங்களுக்கு கிடைத்துள்ள வெங்காயம் மிக குறைவென்றும் இனி அடுத்த மார்ச் மாதம் வரையில் தான் யாழ்ப்பாண வெங்காயம் கிடைக்குமென்றும் சில காலத்துக்கு வெங்காய சப்ளையில் நெருக்கடி இருக்குமென்றும் கூறப்படுகிறது.

சர்வதேச வர்த்தக ஒப்பந்தம்

பாக்கிஸ்தான் கைச் சாத்திட்டது

லண்டன், நவ. 2

பாக்கிஸ்தான் ஸதானிகர் ஹபீப் இப்ராஹிம் ரகிமத்துல்லா ஜெனிவாவில் இருந்து இன்றிரவு லண்டனுக்கு விமான மார்ககமாக வந்து சேர்ந்தார். அவர் ஜெனிவாவில் பாக்கிஸ்தான் சாபில் சர்வதேச வர்த்தக ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ளார். (ராய்ட்டர்)

பாலஸ்தீன் எல்லையில் அராபியத் துருப்புகள்

"பிரிவினையை எதிர்த்துப் போராடத் துணிந்துவிட்டார்கள்"

அராபிய லீக் காரியதரிசி கூறுவது

யூத பயங்கர ரேடியோ எச்சரிக்கை

பாக்தாத், நவ. 2

அராபிய லீக் காரியதரிசி அஸாம்பாஷா ட்ரான்ஸ் ஜோர்டான்மன்னர் அப்துல்லா அராபிய லீகின் சமீபத் தீர்மானத்தை முற்றாக ஆதரிப்பதாகக் குறிப்பிட்டார். பெய்ரூத்தில் நடைபெற்ற லீக் கூட்டத்தில் பாலஸ்தீன பிரதேச உரிமையை நிலைநாட்டுவதாக குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈராக் மாஜிப் பிரதமர் பார்லிமெண்ட் தலைவர் அப்துல் அலீஸ் கஸாஸ் ஆகியோரின் பெயர்களுடன் இங்கு விடுக்கப்பட்ட ஓர் வேண்டுகோளில் அராபிய சேனையின் ஆயுத, வெடி மருந்து தேவைகளுக்காக பணம் சேர்க்கும்படி ஈராக் வாசிகள் கோரப்பட்டுள்ளனர்.

கெய்ரோவில் அராபிய லீக் சார்பில் பேசிய ஒருவர் லீகின் பிரதம காரியதரிசி பாலஸ்தீன எல்லையில் அராபிய சேனைகள் குவிவதாகக் கூறியிருப்பதை விட்டு தமது ஆச்சரியத்தைத் தெரிவித்தார். தங்கள் காரியாலயத்திற்கு இவ்வித தகவல் எட்டவில்லைஎன அவர்கூறினார்

ஆனால் அப்துல் அஸாம் லெபானிய, சிரிய, எகிப்திய சேனைகள் பாலஸ்தீன் எல்லையில் மொய்த்து வருவதை ஊர்ஜிதப்படுத்துவதாகக குறிப்பிட்டார் ட்ரான்ஸ் ஜோர்டான் சேனை பாலஸ்தீனுக்குள்ளே கடமை பாற்றுகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:- "அராபிய லீக் ஒரு பிரதம தளகர்த்தரை நியமிக்கவில்லை. ஆனால் துருப்புகள் திரள்வதை மேற்பார்வைசெய்ய ஒரு கமிஷனை நிறுவியுள்ளது.

அராபியர் பலாத்கார உபயோகத்தை விரும்பவில்லை. ஆயினும் பிரிவினையை எதிர்த்துப் போராட அவர்கள் துணிந்துவிட்டார்கள் என அவர் குறிப்பிட்டார்.

யூதர்கள் பதில்

டெல்அவீவில் கேட்கப்பட்ட யூத பயங்கர இயக்க ரேடியோ அராபியரைபலாத்காரம் உபயோகித்து பாலஸ்தீனில் தம் காரியத்தை முடிக்கலாம் என்று எண்ணவேண்டாமென எச்சரித்துள்ளது. (ராய்ட்டர்)

இந்து-முஸ்லிம் கலாசாரம் மனித முன்னேற்றத்திற்கு முக்கியம்

யேல் சர்வகலாசாலையில் ஸர் ஜபருல்லா பேச்சு

நியூயார்க், நவ. 3

யேல் சர்வகலாசாலையில் உள்ள மாணவர்களுக்கு ஐக்கிய நாடுகளின் பாகிஸ்தான் பிரதிநிதிகள் தலைவர் ஸர் ஜபருல்லாகான் பேசுகையில், இந்தோ-முஸ்லிம் கலாசார கருத்துக்கள், பொருளாதார முன்றன முதலியன மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்துக்கு மிக முக்கியமான வைகளென்றும் அவற்றைப் பாதுகாத்து பரப்புவது தகுதிவாய்ந்ததென்றும் இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் நம்பியதாலேயே பாகிஸ்தான் பிறந்ததென்றும், இந்த பாகிஸ்தான் ஜனநாயக கருத்துக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகளை போடாது அபிவிருத்திக்கு உதவுமென்றும் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் எந்த சாகியத்தாரையும் சர்க்கார் வற்புறுத்த மாட்டாதென்றும் பாகிஸ்தான் தனது கைத்தொழில்களை ஊக்கப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் பிரச்னையே முக்கியமாகக் கொண்டுள்ளதென்றும், உடனடியாக கவனிக்கப்படவேண்டிய குடியேற்றப் பிரச்னைகள் கவனிக்கப்பட்டபின் திட்டமான அடிப்படையில் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு பாகிஸ்தான் பாடுபடுமென்றும் கூறினார். (ராய்ட்டர்)

காஷ்மீரில் எதிரிகள் முன்னேற்றம் தடுக்கப்பட்டது

கத்தியவார் பகுதியில் சிக்கல்கள் அதிகரிக்கின்றன

புதுடில்லி. நவ. 3

காஷ்மீருக்குள் பதினொரு நாட்களுக்கு முன் பிரவேசித்த எதிரிகள் பட்டாணிலே இந்திய துருப்புகளால் தடுக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய சர்க்கார் பாதுகாப்பு மந்திரி சபை அறிக்கை கூறுகின்றது. தலைநகருக்கு எதிரிகள் முன்னேறுவதை இந்திய துருப்புகள் தடுத்து நிற்கின்றன ராயல் இந்திய விமானப் படைகள் எதிரிகள் மீது குண்டுமாரி பொழிந்தன. ஸ்ரீநகர் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் இந்திய துருப்புகளின் எதிர்ப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாகச் செய்யப்பட்டுள்ளன

ஸ்ரீநகரில் இருந்து கிடைத்துள்ள செய்திப்படி அங்குள்ள ஐந்தாம் படையினர் கைது செய்யப்படுவதாக தெரிகிறது. ஐந்தாம் படையினர் என்று கூறப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் வீதிகளில் கொண்டுசெல்லப்பட்டனர்.

கிராமங்களில் கொள்ளை

பல கிராமங்களில் கொள்ளைகள் நடப்பதாகவும் அநேக கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன வென்றும் புதுடில்லிக்குச் செய்திகள் கிடைத்துள்ளன. செய்திப் போக்குவரத்து கஷ்டங்களால் இங்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றிய உண்மைவிபரங்களை அறிய முடியவில்லை.

ஜுனாகத் தற்காலீகசர்க்கார் தொண்டர் படைகள் திலவாரா கடா என்னுமிடத்தையும் சுற்றுடல்களிலுள்ள கிராமங்களையும் கைப்பற்றி விட்டதாக கத்தியவார் சமஸ்தான எல்லையிலுள்ள ராஜ்கோட்டில் இருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இந்துக்கள் அதிகமாயுள்ள பிரதேசத்தை பாகிஸ்தானுடன் சேர்க்க அங்குள்ள நவாப் பிரகடனம் செய்த பின்னர் ஜுனாகத் பிரஜைகள் சமஸ்தானத்துக்கு வெளியே தற்காலீக சர்க்காரை அமைத்துள்ளனர். ஜுனாகத்தில் சுமார் 25 கிராமங்களை இத் தற்காலீக சர்க்கார் படைகள் கைப்பற்றியுள்ளன வென்றும், தலைநகருக்கு இடையில் ஆக 18 மைல்கள்தான் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு படை

பாகிஸ்தான் ஆயுதப் படைகளுடன் துணைக்காக தேசிய பாதுகாப்பு படையையும் சேர்ப்பதற்கு பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் சட்டம் ஆக்கியுள்ளார். தேசிய பாதுகாப்பு படையினர் தொண்டர்கள் என்ற அடிப்படையில் எடுக்கப்படுவார்கள் என்றும் பாகிஸ்தான் இராணுவ அதிகாரியின் கீழ் அவர்கள் பயிற்சி அளிக்கப்படுவார்கள் என்றும் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் பிரதேசங்களெங்கும் இச் சட்டம் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

பாகிஸ்தானின் ஆட்சேபனை

இந்திய சர்க்கார் மணவடார் என்னும் சிறிய சமஸ்தானத்தை எடுத்து நிர்வகிப்பதை ஆட்சேபித்து பாகிஸ்தான் சர்க்கார் ஒரு அறிக்கை விடுத்துள்ளது. இந்திய நிலைமையை பாதுகாக்க அக்டோபர் 23-ம் தேதி மணவடார் பகுதி நிர்வாகத்தை இந்திய சர்க்கார் எடுத்துள்ளதாக இந்திய சர்க்கார் தெரிவித்திருந்தது.

பாகிஸ்தான் பிரதேசங்களில் சமாதானத்துக்கு ஆபத்து விளைக்கும் முறையில் நடந்து கொள்வதாக சந்தேகிக்கப்படுபவர்களை வாரண்டின்றி பிரதம கமிஷனரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் கைதுசெய்யலாமென்று ஒ சட்டத்தை பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் வெளியிட்டுள்ளார்.

லண்டனுக்கு தூது கோஷ்டி

இந்திய ஆயுதப் படைகளின் தூது கோஷ்டி லண்டனுக்கு நேற்றுக் காலை 7 மணிக்குப் புறப்பட்டுள்ளது. இக் கோஷ்டிககு எச். எம். பட்டேல் தலைமை தாங்கிச் செல்கின்றார்.

சித்ராஸ் பாகிஸ்தானில் சேர்ந்தது?

காஷ்மீர் எல்லையில் உள்ள சிதராஸ் என்னும்இடத்தை பாகிஸ்தானுடன சேர்த்துவிட்டதாக அறியப்படுகிறது. இப்பிரதேசம் சுமார் 4000 சதுர மைல் கொண்டது கடந்த 300வருடங்களாக ஒரு பரம்பரையினரே இப்பிரதேசத்தை ஆட்சி செய்து வந்துள்ளனர்.

இந்திய யூனியன்-ஹைதராபாத் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை

புதுடில்லியில் இந்திய சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் ஹைதராபாத சமஸ்தான பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. ஆகஸ்டு 15-ம் தேதி அதிகார மாற்றத்துடன் ஹைதராபாத்-இந்திய யூனியன் தொடர்புபற்றிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயிருந்தன. ஹைதராபாத் நகரில் முஸ்லிம்களின் ஊர் வலத்தின்பின் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் மாற்றப்பட்டுள்ளனர்.

324,000 ருத்தல் வெண்ணெய் வந்துள்ளது.

9000 டன் அரிசி எகிப்தில் இருந்து வருகிறது

கொழும்பு நவ. 3

இலங்கைக்கு எகிப்திலிருந்து வரும் 9000 டன் அரிசியும் இன்று வருமென எதிர்பார்க்கப்படும் "லா கோர்டில்லேரா" என்னும் கப்பலில் வருகிறது ஆஸ்திரேலியாவில் இருந்து இன்று வந்து சேர்ந்த ஒரு கப்பலில் இலங்கைக்கு 480 டன் உணவுப் பொருள்கள் வரை வந்துள்ளன இக்கப்பலில் இலங்கைக்கு 324,000 ருத்தல் வெண்ணெய் வந்துள்ளது ஆஸ்திரேலியாவில் இருந்து வரும் "ஹோக் சில்வர்ஸ்டார்" என்னும் கப்பலில் 2790 டன் பொதுப் பொருள்கள் வருகின்றன.

வேலையற்ற ஸிவில் உத்தியோகஸ்தர்

மந்திரி காரியதரிசிக்கு முறையீடு

கொழும்பு, நவ 3

ஓர் உயர் பதவியை வகிக்கும் "ஸிவில் ஸேர்விஸ்" உத்தியோகஸ்தர் தம் இலாகா மந்திரியின் நிரந்தரக் காரியதரிசிக்கு, தமது மேல் உத்தியோகஸ்தர் பல கிழமையாக ஒரு வேலையும் கொடுக்கவில்லை என்று அறிவித்துள்ளாராம்!

இந்த மாதிரி தம்மைத் தனிமையில் ஒதுக்கிவிட்ட சம்பவத்தை அறியுமாறும் அந்த ஸிவில் உத்தியோகஸ்தர் கேட்டுள்ளாராம்.

தம்மைத் தனியே ஒரு வேலையுமின்றி விடப்பட்டிருப்பதால் தாம் நாள் முழுக்க ஒருவேலையுமில்லாதிருக்கவேண்டி யிக்கின்றதென்று அவர் முறையீடு செய்திருக்கின்றார் மற்றும் ஸிவில் ஸேர்விஸிலுள்ளவர்களும் இவரை ஏளனஞ் செய்வதாகவும் கூறியிருக்கின்றாராம்.

இச் சம்பவததை ஸிவில் ஸேர்விஸ சங்கத்தினருக்கும் அவ்வுத்தியோகஸதர் அறிவிக்க இருக்கின்றதாகவும் கூறியுள்ளாராம்.

நகர கவுன்ஸிலுக்கு போட்டியின்றி தெரிவு

டொடன்டுவா, நவ 3

ஹிக்கடுவா-டொடன்டுவா நகர கவுன்சில் இரண்டாவது வார்டு அங்கத்தினர் திரு கே எச். டபிள்யூ ஓ டி சில்வா ராஜிநாமாசெய்ததின்பின் அந்த வார்டுக்கு அபேட்சகராக முன் வந்த திரு டபிள்யூ டி எஸ். வாருசவிதாரனா போட்டியின்றித் தெரியப்படடார்.

மரத்தில் தொங்கிய பிரேதம்

கொழும்பு, நவ. 4

மகாகம போலிஸ பகுதியில் உள்ள கெவிங்கந்தை எஸ்டேட்டில் ஒரு மரத்தில் அழுகிய நிலையில் ஒரு பிரேதம் தொங்கிக் கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. காலஞ் சென்றவர் நீதிதிகல போலிஸ் பகுதியில் உள்ள மீபககமாவைச் சேர்ந்தவரென்று கூறப்படுகிறது. தலைமைக்காரரும், மரண விசாரணை அதிகாரியும் ஸதலத்தில் விசாரணை செய்து தற்கொலை செய்துகொண்டதாகத் தீர்ப்பளித்தனர்.

ஆற்றில் மிதந்த குழந்தையின் பிரேதம்

கொழும்பு, நவ. 3

மினுவாங்கொடை ஓயாவிலே ஒரு குழந்தையின் (சுமார் 1 1/2 வயது) பிரேதம் மிதந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது இதுசம்பந்தமாக கம்பஹாபோலிஸ பகுதியிலுள்ள தொடங்கொடையைச்சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டு போலிஸ காவலில் வைக்கப்பட்டுள்ளார். மேற்கொண்டு புலன் விசாரணை நடக்கிறது.

போலிசாருக்கு கிடைத்த தகவலின்படி இப்பொழுது கைது செய்யப்பட்டுள்ளவரே குழந்தையின் தகப்பனென்றும் அக்குழந்தையை வளர்ப்பதற்கு ஒருவரும் முன் வராததால் குழந்தையை ஆற்றில் அவர் எறிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது

சிக்கனம் வேண்டும்

பிரிட்டிஷ் மக்களுக்கு கிரிப்ஸ வேண்டுகோள்

லண்டன், நவ. 3

பொருளாதார மந்திரி ஸர். ஸ்டாபோர்ட கிரிப்ஸ் பிரிட்டிஷ் மக்கள் தங்கள் பொருளாதார முன்னேற்றத்தையிட்டு அதிக சிக்கனமாக எப்பொருளையும் வீணாக்காமல் இருக்க வேண்டுமென்று ரேடியோ மூலம் வேண்டிக்கொண்டார்

உணவு, கரி,எண்ணெய் மின்சாரம், காகிதம் எல்லாவற்றிலும் சிக்கனம் அவசியம் என அவர் கூறினார். நிலக்கரி சிறிதளவ்லாவது நாம் ஏற்றுமதி செய்ய முடியுமானால் நம்மால் உணவு சற்று பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் இப்போதுள்ள நிலக்கரி நமக்கே போதா நிலையில் இருக்கிறது என்றும் அவரால் சொல்லப்பட்டது. (ராய்ட்டர்)

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோடு
மருதானை
புத்தம் புதிய படம்!!

இன்று காண்பிக்கப்படுவது!
மகத்தான 2-வது வாரம்
தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்
சுவர்ணலதா-நஸீர் திறம்பட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்
சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்
பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்
முன் இடம் தேடுங்கள்!

இந்திய சர்க்கார் ஜவுளிக் கொள்கை

உற்பத்தியைப் பெருக்கத் திட்டம்

புதுடில்லி, நவ 3

இந்திய சர்க்கார் தனது ஜவுளிக்கொள்கைபற்றிய திட்டதை வெளியிட்டுள்ளது. அதன்படி அதன் உற்பத்தியை 8000 லட்சம் கெஜம் வருடத்துக்கு அதிகரிப்பதென்றும் டிஸெம்பர் முதல் தேதி தொடக்கம் உற்பத்தி திட்டத்தை தராதரத்துக்கேற்ப கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. ஆலைகளுக்கும் கைநெசவுகளுக்கும் சரி சமமாக உற்பத்தி அதிகரிப்பு பகிர்ந்தளிக்கப்படுமெனத் தெரிகிறது. மற்றும் ஐந்து முக்கிய விபரங்கள் அதில் குறிக்கப்பட்டுள்ளன. (ராய்ட்டர்)

புரட்சி விழாக் கொண்டாட்ட முஸ்தீபு

சோவியத் அரசாங்கத்தின் புதிய சுலோகங்கள்

மாஸ்கோ, நவ. 2

சோவியத் ரஷியாவின் 30-ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அங்குள்ள கம்யூனிஸட் கட்சி 48 சுலோகங்களை வெளியிட்டுள்ளது அவற்றில் நாட்டைக் காப்பாற்ற விழிப்பாயிருக்கும்படி மக்கள் வற்புறுத்தப்பட்டுள்ளனர்.

எல்லா சோவியத் பத்திரிகைகளும் தமது முழு முதலாம் பக்கத்தையும் இந்த சுலோகங்களைக் கொண்டு இன்று நிறைத்திருந்தன செஞ்சேனை வீரர்களும் செங்கடல் படையினரும் ராணுவ அரசியல் அறிவிற் சிறந்து நாட்டு முன்னேற்றத்திற்கு உதவும்படி கோரப்பட்டிருக்கிறார்கள்.

"சக்தி வாய்ந்த சமுத்திரப் படையை சோவியத் நாட்டிற்கு நாம் அளிப்போம்" என்கிறது ஒரு சுலோகம். இன்னொன்று சமாதானத்தைப் பற்றியது. "சர்வ தேசத் தொழிலாள மக்களே, யுத்தக் கூச்சல் கிளப்புவோரை அம்பலப்படுத்துங்கள்! சமாதானத்தைக் காக்க விழிப்போடு அணி வகுங்கள்!" என்று அது உலக தொழிலாளரை அழைக்கிறது.

நவம்பர் 7, 8, 9-ம் தேதிகள் சோவியத் நாட்டில் புரட்சி ஞாபக தினம் கொண்டாடப்படும் போது ஊர்வலங்களிலும், கட்டிட அலங்காரங்களிலும் ஆயிரக் கணக்கான கொடிச் சீலைகளில் மேற்கண்ட மணிவாசகங்கள் பொறித்துத் திகழும். இம் மூன்று நாளும் அரசாங்க விடுமுறையாகும். (ராய்ட்டர்)

இந்திய யூனியனில் நிஜாம் சேரும்வரை

மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்லமாட்டார்கள்!

ஔரங்கபாத், நவ. 1

ஊஸ்மானியா காலேஜ் மற்றும் ஸதல கல்வி ஸ்தாபனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த எல்லா ஹிந்து மாணவர்களும், ஹைதராபாத் சமஸ்தான மாணவர் பெடரேஷன் ஆதரவிலே தற்போதைய ராஜிய நிலைமையைப்பற்றி ஆலோசிக்க இன்று ஒரு அவசரக் கூட்டம் நடத்தினர். சமஸ்தானத்தில் சமஸ்தான காங்கிரஸ் ஆரம்பித்துள்ள சத்யாக்கிரஹ இயக்கத்தை பலப்படுத்த எல்லா கல்வி ஸ்தாபனங்களையும் பகிஷ்கரிப்பதென்று கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது

பின்னர், ஹைதராபாத் இந்திய யூனியனில் சேரவேண்டுமென்ற கோஷங்களுடன் எல்லா மாணவர்களும் தங்கள் வகுப்புகளிலிருந்து வெளியே வந்தனர். ஹைதராபாத் இந்திய யூனியனில சேரும்வரை பள்ளிக்கூடங்களுக்கு செல்வதில்லை என்று அவர்கள் முடிவு செய்தனர்.

ஸ்தல மில்களிலும் இதர தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்கள், இதேபோல காலவரையறையின்றி சீக்கிரத்தில் ஸ்டிரைக் செய்வார்கள். இதுபோன்றமுடிவு இனனும் ஒன்றிரண்டு தினங்களில செய்யப்படும்.

அமெரிக்க அரசாங்கப் போக்கு

ஹென்றி வாலஸ் அம்பலமாக்குகிறார்

ரோம், நவ. 2

இங்குள்ள இடது சாரி கம்யூனிஸட் பகதிரிகை யுனிட்டாவுக்குப் பேட்டியளித்துப் பேசும்போது அமெரிக்க மாஜி உப ஜனாதிபதி ஹென்றிவாலஸ பின்வருமாறு குறிப்பிட்டார்:-

அமெரிக்காவில் ஒரு பொருளாதார முறிவு ஏற்படாதவண்ணம் தடுக்க முடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அமெரிக்க காங்கிரஸ நெருக்கடியை தடுக்கத்தகுந்த நடவடிக்கை எடுக்காது என்றே தோன்றுகிறது. உலகின் மற்றெல்லா நாடுகளிலும் பார்க்க அமெரிக்காவில் அடுத்த யுத்தம் ஒன்றைத் தடுக்க முடியாது என்ற மனோபாவம் அதிகமாக இருக்கிறது. பிரசாரமே இந்த மனோநிலையைச் சிருஷ்டித்துள்ளது.

அமெரிக்காவில் மூன்றாவது அரசியல் கட்சி ஒன்று தோன்றுமா என்பதற்கு இப்போதில் சொல்ல முடியாது. ஆனால் சமாதானக் கொள்கையுடைய நாட்டஅத்தகையகட்சி தேவைப்படுமானால் அது நிறுவப்படும்.

நீர்கொழும்பு அர்பன் சபை உபதேர்தல்

திரு பி ஏ. பெர்னன்டோ தெரியப்பட்டார்

நீர்கொழும்பு, நவ. 3

நீர்கொழும்பு அர்பன்சபையின் இரண்டாவது வார்டு அங்கத்தினர் திரு. எம். ஜோஸப் காலமானதால் இப்பகுதிக்கு அங்கத்தினர் இல்லாதிருந்தது. இப்பொழுது இத்தொகுதிக்கு ஒரு உபதேர்தல் நடத்தப்பட்டது. இந்ததொகுதியில் திரு. ஜே. பி. அஸரப்பா தேர்தல அதிகாரியாக இருந்தார். இங்கு போட்டியிட்ட திரு. பி. அன்ட்ரு பெர்னன்டோவுக்கு 491 வாக்குகளும், திரு. டி. பி. ஸ். காரன் என்பவருக்கு 355 வாக்குகளும் கிடைத்தன. திரு. பெர்னன்டோ அங்கத்தவராகத் தெரியப்பட்டார் என தேர்தல் அதிகாரி அறிவித்தார்.

இந்திய தென்னாப்பிரிக்க சச்சரவு

தென்னாப்பிரிக்க பிரதிநிதி கூற்று

நியூயார்க், நவ. 2

தென்னாப்பிரிக்க ஐ. நா. சபைப் பிரதிநிதி ஹாலோரன்ஸ் இந்திய-தென்னாப்பிரிக்க சச்சரவு சம்பந்தமாக பின்வருவருமாறு குறிப்பிட்டுள்ளார்

"ஆப்பிரிக்கா மீது வசை பாடும் நோக்கோடு இந்தியா இவ்விஷயத்தை வாதித்ததால் தென்னாபிரிக்கா அதற்குத் தீவிரமாகப் பதில் தரும். நாம் இனிமேல் இது விஷயமாக ஒன்றும் விளையாடப் போவதில்லை."

தென்னாப்பிரிக்க இந்தியப் பிரச்னை இன்னும் சில நாளில் அரசியல் கமிட்டியில் வாதிக்கப்படும் என்று தெரிகிறது.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஞு நவம்பர் மீ 4உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org